இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 102 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 05 – செவ்வாய்க்கிழமை 21 நவம்பர் 2023 – சென்னை 16 + 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 102: Thiruvalluvar Year - 2054 - Karthigai 05 - Tuesday 21 November 2023 - Chennai 16+8 Pages ₹5.00

## 2 ஆண்டுகளாக முடிவெடுக்காமல் என்ன செய்து கொண்டிருந்தார்?

# உச்சநீதிமன்றம் ஆளுநருக்கு சரமாரியாகக் கேள்விகள்!

## வரும் 29-ஆம் தேதிக்குள் பதிலளிக்க உத்தரவு!

**புதுடெல்லி, நவ. 21 -**

**தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட மசோதாக்கள் மீது 2 ஆண்டுகளாக முடிவெடுக்காமல் ஆளுநர் என்ன செய்துகொண்டிருந்தார் என உச்சநீதிமன்றம் சரமாரியாகக் கேள்வி எழுப்பி உள்ளது.**

**சட்டப்பேரவையில் மீண்டும் நிறைவேற்றி அனுப்பப்பட்டுள்ள 10 மசோதாக்கள் மீது ஆளுநர் எப்போது முடிவெடுப்பார் என்பதை வரும் 29ம் தேதிக்குள் தெரிவிக்க வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**



தமிழ்நாடு அரசால் அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் காலதாமதப்படுத்தும் ஆளுநர் ஆர்.என். ரவியின் செயல்பாடுகளை சட்டவிரோதம் என அறிவிக்க உத்தரவிடக் கோரி உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசின் தரப்பில் அண்மையில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

### தமிழ்நாடு அரசின் சார்பில் கோரிக்கைகள்!

இது தொடர்பாக கடந்த 6ஆம் தேதி தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் அடங்கிய அமர்வின் முன், தமிழ்நாடு அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர்களான அபிஷேக் மனு சிங்வி மற்றும் பி.வில்சன் ஆகியோர் ஆஜராகி சில கோரிக்கைகளை முன்வைத்தனர்.

அதன்படி, தமிழ்நாடு அரசின் மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க உத்தரவிடக் கோரிய ரிட் மனு நவம்பர் 10ஆம் தேதி விசாரணைக்காக பட்டியலிடப்பட்டது.

### தமிழ்நாடு அரசு வாதம்!

அவ்வாறே, நவ. 10 அன்று - ஆளுநர் ரவிக்கு எதிராக தமிழ்நாடு அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

“மசோதாக்களை கிடப்பில் போட்டு அரசின் செயல்பாடுகளை ஆளுநர் முடக்கி வைக்கிறார். பணி நியமனம் தொடங்கி எந்த ஒரு கோப்புகளுக்கும் அனுமதி கொடுக்க ஆளுநர் மறுப்பு தெரிவிக்கிறார்; கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்யும் கோப்புகளைக் கூட கிடப்பில் போட்டு வைத்திருக்கிறார்” என தமிழ்நாடு அரசு தனது வாதத்தை முன் வைத்தது.

### உச்சநீதிமன்றம் உத்தரவு!

அதையடுத்து, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வு, மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டது. அந்த நோட்டீஸில், ‘மக்களின் உரிமைகளை சிதைக்கும் வகையில் ஆளுநர் செயல்படுகிறார்’ என்ற தமிழ்நாடு அரசின் மனுவுக்கு பதிலளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இம்மாதம் 20ஆம் தேதி வழக்கு மீண்டும் விசாரணைக்கு வரும்போது மத்திய அரசின் அட்டர்னி ஜெனரல் அல்லது அவருக்குப் பதிலாக சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கமளிக்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய மசோதாக்களுக்கு ஒப்புதல் தராத ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிராக தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த மனு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் அமர்வு முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

### தமிழ்நாட்டு மக்கள் பாதிப்பு!

அப்போது, தமிழ்நாடு அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் முகுல் ரோத்தகி , அபிஷேக் சிங்வி மற்றும் பி.வில்சன் ஆகியோர் ஆஜராகினர். மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்காததால் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் வாதிட்டனர். எந்த காரணமும் கூறாமல் I with hold assent என்று மசோதாக்களை ஆளுநர் திருப்பி அனுப்பி உள்ளார் என்றும், எனவே அவற்றை சட்டப்பேரவையில் மீண்டும் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி உள்ளதாகவும் தெரிவித்த தமிழ்நாடு அரசின் வழக்கறிஞர்கள், ஒவ்வொரு முறையும் ஆளுநருக்கு எதிராக உச்சநீதிமன்றத்திற்கு வந்துகொண்டிருக்க முடியாது என்றும் தெரிவித்தனர்.

8 கோடி மக்களுக்கு பதிலளிக்க வேண்டிய கடமை தங்களுக்கு உள்ளது. 15 மசோதாக்கள் ஆளுநரிடம் நிலுவையில்உள்ளன. உரியவிளக்கமின்றி திருப்பி அனுப்பியுள்ளார் ஆளுநர்.

சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பிவைக்கப்படும் மசோதாக்களை, காலவரம்பில்லாமல் ஆளுநர் நிலுவையில் வைத்திருக்க முடியாது என்றும் அவர்கள் வாதிட்டனர்.

### நீதிபதிகள் சரமாரி கேள்வி!

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், கடந்த 10ஆம் தேதி நோட்டீஸ் அனுப்பி உத்தரவிட்ட பிறகு 13ஆம் தேதிதான் ஆளுநர் 10 மசோதாக்களை திருப்பி அனுப்பி உள்ளார் என்பதை சுட்டிக் காட்டி, 2 ஆண்டுகளாக ஆளுநர் என்ன செய்துகொண்டிருந்தார், வழக்குத் தொடரும் வரை ஏன் தாமதம் செய்தார் என்று கேள்வி எழுப்பினர். அரசியல் சாசன பிரிவு 200ன்படி ஆளுநருக்கு மூன்று நடவடிக்கைகள்தான் எடுக்க முடியும் என்ற நீதிபதிகள், ஒப்புதல் வழங்குவது, திருப்பி அனுப்புவது அல்லது குடியரசுத் தலைவருக்கு அனுப்புவது ஆகிய 3 முடிவுகளையே ஆளுநர் எடுக்க முடியும் என்று தெரிவித்தனர். எந்த முடிவும் எடுக்காமல் மசோதாக்களை ஆளுநர் எப்படி நிலுவையில் வைத்திருக்க முடியும் என்றும் நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

### எப்போது முடிவெடுப்பார்?

அப்போது, நீதிபதிகளின் கேள்விகளுக்கு பதிலளிக்க அவகாசம் வேண்டும் என அட்டர்னி ஜெனரல் வெங்கட்ரமணி கேட்டுக்கொண்டார். இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், சட்டப்பேரவையில் மீண்டும் நிறைவேற்றி அனுப்பப்பட்டுள்ள 10 மசோதாக்கள் மீது ஆளுநர் எப்போது முடிவெடுப்பார் என்பதை வரும் 29ஆம் தேதிக்குள் பதிலளிக்க வேண்டும் என உத்தரவிட்டு, வழக்கு விசாரணையை டிசம்பர் ஒன்றாம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

### ஒன்றிய அரசுக்கு நோட்டீஸ்!

இதற்கிடையே, கேரள ஆளுநருக்கு எதிராக அம்மாநில அரசு தொடர்ந்த வழக்கில், ஒன்றிய உள்துறை அமைச்சகம் மற்றும் ஆளுநருக்கு நோட்டீஸ் அனுப்பி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கேரள சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பிவைக்கப்பட்ட 8 மசோதாக்களை ஆளுநர் கிடப்பில் போட்டிருப்பதாகவும், 2ஆண்டுகளாக மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் காலதாமதம் செய்வதாகவும் உச்சநீதிமன்றத்தில் கேரள அரசு வாதிட்டது. நிலுவையில் உள்ள மசோதாக்கள் தொடர்பாக ஒன்றிய அரசு மற்றும் கேரள ஆளுநர் வரும் 24ஆம் தேதிக்குள் பதிலளிக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கின் அடுத்த விசாரணை வரும் 24ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.11.2023) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி (NLC) நிறுவனத்திற்காக நிலஎடுப்பு செய்ததால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட மாற்று இடங்களுக்கு நிலவரித்திட்டப் பணி மேற்கொண்டு அம்மக்களின் 60 ஆண்டு கால கோரிக்கைக்கு தீர்வு காணப்பட்டு 3543 பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கும் பணியினை தொடங்கி வைக்கும் விதமாக, 7 பயனாளிகளுக்கு பட்டாக்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், ஆர்.காந்தி, சி.வி.கணேசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நடப்பாண்டில் 9 லட்சத்து 21 ஆயிரம்

# விவசாயிகளுக்கு ரூ.7,600 கோடி பயிர்க்கடன்!

## கடந்த ஆண்டைக் காட்டிலும் கூடுதலாக ரூ.848 கோடி வழங்கப்பட்டுள்ளது!

*சென்னை, நவ. 21 -*

*தமிழ்நாட்டில், 9 லட்சத்து 21 ஆயிரம் விவசாயிகளுக்கு நடப்பாண்டில் 7 ஆயிரத்து 600 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளதாக கூட்டுறவுத்துறை தெரிவித்துள்ளது.*

*இது குறித்து தமிழ்நாடு கூட்டுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டிருப்ப தாவது :-*

*கூட்டுறவு வங்கிகள் மூலம் தமிழ்நாட்டில் 16 ஆயிரத்து 500 கோடி ரூபாய் பயிர்க் கடன் வழங்க திட்டமிடப்பட்டு, இதுவரை 9 லட்சத்து 21ஆயிரத்து 332 விவசாயிகளுக்கு 7ஆயிரத்து 600 கோடி அளவிற்கு பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும், கடந்த ஆண்டில் இதே காலத்தில் வழங்கியதைக் காட்டிலும் கூடுதலாக 848 கோடி ரூபாய் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பயிர்க் கடன் பெற்றுள்ள விவசாயிகள் உரிய காலக் கெடுவிற்குள் கடனை திருப்பிச் செலுத்தும் வகையில், 7 சதவீதம் வட்டி ஊக்கத் தொகையை முழுவதுமாக தமிழ்நாடு அரசே ஏற்றுக் கொண்டு விவசாயிகளுக்கு வழங்கி வருவதாகவும், வேளாண் பெருமக்களுக்கு அனைத்து வகையான சேவைகளை அளித்திடும் வகையில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களை பல்நோக்கு சேவை மையங்களாக மாற்றும் திட்டத்தின்கீழ் பவர்டில்லர், டிராக்டர் மற்றும் விவசாய உபகரணங்கள் வாங்குவதற்கும், சேமிப்புக் கிடங்குகள் கட்டுவதற்கும் என மொத்தம் 5 ஆயிரத்து 18 திட்டங்களுக்கு சுமார் 460 கோடியே 64 லட்சம் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.*

*இவ்வாறு கூட்டுறவுத் துறையின் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.*

## என்.எல்.சி.க்கு நில எடுப்பு! பாதிக்கப்பட்ட

# 3543 பேருக்கு பட்டாக்கள்! முதல்வர் வழங்கினார்!

## 60 ஆண்டுகால கோரிக்கைக்குத் தீர்வு!

சென்னை, நவ. 21 –

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.11.2023) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி (NLC) நிறுவனத்திற்காக நிலஎடுப்பு செய்ததால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட மாற்று இடங்களுக்கு நிலவரித்திட்டப் பணி மேற்கொண்டு அம்மக்களின் 60 ஆண்டு கால கோரிக்கைக்கு தீர்வு காணப்பட்டு 3543 பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கும் பணியினை தொடங்கி வைக்கும் விதமாக, 7 பயனாளிகளுக்கு பட்டாக்களை வழங்கினார். மேலும், 14 கோடியே 86 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள திருவட்டார், கிள்ளியூர் மற்றும் பொன்னேரி வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் தேனியில் கூட்டரங்கக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்து, இணையவழிச் சேவையின் மூலமாக நில அளவைக்கு (FLine measurement) விண்ணப்பிக்கும் புதிய வசதியையும் தொடங்கி வைத்தார்.

வருவாய்த்துறை, மாநிலத்தின் நிருவாக அமைப்புக்கு முதுகெலும்பாக விளங்குவதோடு, சாமானிய மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், அரசின் பல்வேறு சமூகப் பொருளாதாரத் திட்டங்களை செயல்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றுகிறது. மழை, வெள்ளம், புயல் போன்ற பேரிடர் காலங்களில் மக்கள் துயர் துடைக்கும் துறையாகவும் இத்துறை விளங்கி வருகிறது. இத்துறையின் பணியினை மேலும் செம்மைப்படுத்தும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல், துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல், பொதுமக்கள் எளிதில் பயன்பெறும் வகையில் இணையவழிச் சேவைகளை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

### நில வரி திட்டப் பணிகள்!

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி சுரங்கம் அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டபோது அந்த நில எடுப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 1959ஆம் ஆண்டு விருத்தாசலம் வட்டம், விஜய மாநகரம் மற்றும் புதுக்கூரைப்பேட்டை கிராமங்களில் குடியமர்த்தப்பட்டனர். இவ்வாறு மறுகுடியமர்த்தப்பட்ட கிராம நிலங்களில் நிலவரித்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படாமல் இருந்து வந்த நிலையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையால் 26.05.2022 அன்று அரசாணை வெளியிடப்பட்டு சுமார் 3,000 குடும்பங்கள் பயனடையும் வகையில் வருவாய் நிலவரித்திட்டப் பணிகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டது. அதன்படி, விருத்தாச்சலம் வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் நிலவரித் திட்ட அலகு ஏற்படுத்தப்பட்டு நிலவரித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்காக நிலஎடுப்பு செய்யப்பட்டதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, விஜயமாநகரம் கிராமத்தில் 2676 நபர்களுக்கு 1371 பட்டாக்களும், புதுக்கூரைப்பேட்டை கிராமத்தில் 867 நபர்களுக்கு 475 பட்டாக்களும் என மொத்தம் 3,543 பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கிடும் அடையாளமாக, முதலமைச்சர் அவர்கள் 7 பயனாளிகளுக்கு பட்டாக்களை வழங்கினார்.

### வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்!

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் மற்றும் கிள்ளியூரில் ரூ. 7 கோடியே 50 இலட்சத்து 94 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரியில் ரூ. 3 கோடியே 75 இலட்சத்து 40 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ரூ. 3 கோடியே 60 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள கூட்டரங்கக் கட்டடம் என மொத்தம் 14 கோடியே 86 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வருவாய்த் துறை கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

### இணையவழி மூலமாக நிலஅளவைக்கு விண்ணப்பித்தல்!

நில உரிமையாளர்கள் தங்களது நிலங்களை அளவீடு செய்ய சம்பந்தப்பட்ட வட்ட அலுவலகங்களுக்கு நேரில் சென்று விண்ணப்பிக்க வேண்டும் என்று இருந்த நிலையை மாற்றி, பொதுமக்களின் வசதிக்காக ‘எந்நேரத்திலும் எவ்விடத்திலிருந்தும்’ நிலஅளவை செய்ய https://tamilnilam.tn.gov.in/citizen என்ற இணையவழியில் விண்ணப்பிக்கும் புதிய வசதியை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று தொடங்கி வைத்தார்.

இப்புதிய சேவையின் மூலம், பொதுமக்கள் நிலஅளவை செய்ய விண்ணப்பிக்கும் பொருட்டு வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. பொதுமக்கள் நிலஅளவை கட்டணம் உள்ளிட்ட கட்டணங்களை செலுத்த வங்கிகளுக்கு நேரில் செல்லாமல், இணையவழியிலேயே செலுத்தி விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நிலஅளவை செய்யப்படும் தேதி மனுதாரருக்கு குறுஞ்செய்தி அல்லது அலைபேசி வாயிலாக தெரிவிக்கப்படும். மேலும், நிலஅளவை செய்யப்பட்ட பின்னர் மனுதாரர் மற்றும் நிலஅளவர் கையொப்பமிட்ட ‘அறிக்கை/வரைபடம்’ ஆகியவற்றை மனுதாரர் https://eservices.tn.gov.in/ என்ற இணையவழிச் சேவையின் மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இந்நிகழ்ச்சியில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே. பிரபாகர், நில நிர்வாக ஆணையர் சு. நாகராஜன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் வே.ராஜாராமன், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் ப.மதுசூதன் ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# சமதர்மமே நம் இலக்கு!

## நீதிக்கட்சி தொடங்கப்பட்ட நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

சென்னை, நவ. 21 -

நீதிக்கட்சி தொடங்கப்பட்ட நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில், சமத்துவ சமுதாயம் நோக்கி உழைப்போம் என்று அறைகூவல் விடுத்துள்ளார்.

அது வருமாறு :-

**இன்று,**

**ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்த அநீதிகளுக்கு எதிரான நெடும்பயணத்தின் முதலடி எடுத்து வைக்கப்பட்ட நாள்!**

**கடந்த நூறாண்டுகளில் தமிழ்நாடு கண்ட மாற்றங்களுக்கான விதை ஊன்றப்பட்ட நாள்!**

**நீதிக்கட்சி தொடங்கப்பட்ட நாள்!**

**கொள்கைக் களத்தில் புதிய சவால்கள், புதிய எதிரிகள் தோன்றிக்கொண்டே இருக்கலாம். ஆனால் நமது இலக்கு மாற்றமில்லாதது. அதுதான் சமத்துவச் சமுதாயம்! அதை நோக்கி உழைப்போம்!**

இவ்வாறு தமது சமூக வலைதளப் பக்கத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 21-11-2023

# ஆளுநர் பதவியே அகற்றப்பட வேண்டியதே - 1

“ஆளுநர் பதவி என்பதே அகற்றப்பட வேண்டிய பதவியாக இருந்தாலும் – அது இருக்கும் வரை மக்களாட்சித் தத்துவத்துக்கு அடங்கி இருக்க வேண்டியதுதான் மரபு ஆகும்” – என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசி இருப்பதையே அரசியல் ரீதியான நடைமுறையாக்கப் போராடியாக வேண்டும்.

ஆளுநர் பதவிகளை தூக்கிச் சுமக்க வேண்டிய அவசியமில்லை என்பதை அரசியலமைப்புச் சட்ட மேதைகளும், அரசியல் ஆய்வாளர்களும் காலம் காலமாகச் சொல்லி வந்துள்ளார்கள்.

‘மலர்க மாநில சுயாட்சி’ என்ற அறிவுக் கருவூலத்தை உருவாக்கிக் கொடுத்த கு.ச.ஆனந்தன் அவர்கள், ஆளுநர்களை இப்படி வரையறுக்கிறார்...

**“மாநில ஆளுநர் என்பவர், நமது அரசமைப்புச் சட்டத்தின் ஓர் அதிசயப் படைப்பு: ஆங்கிலேயர் விட்டுச் சென்ற ஏகாதிபத்தியத்தின் கடைசிச் சின்னம், இந்திய நாட்டின் விடுதலைக்குப் பின்னரும், நம்மால் அறுத்தெறிய முடியாத ஓர் அடிமைப்பந்தம். ஆளுநர் என்பவர், ஒரு மாநிலத்தின் ஆட்சித் தலைவர் (நிர்வாகத் தலைவர்); மாநிலச் சட்டமன்றத்தின் மிக முக்கியக் கூறாக இருப்பவரும் அவரே. ஆனால், அப்படிப்பட்ட மாநில ஆளுநரைக் குடியரசுத் தலைவரின் மூலமாக - மத்திய அரசே நியமனம் செய்கிறது. அவருடைய நியமனத்தில் மாநில மக்களுக்கும், மாநில அரசிற்கும் எவ்வகைத் தொடர்பும் பங்கும் கிடையாது”** என்று எழுதி இருக்கிறார்.

பிரிட்டிஷ் அரசு, இந்திய நாட்டை ஆள்வதற்காக உருவாக்கி வைத்திருந்தவைதான் கவர்னர்களும் கவர்னர் ஜெனரல்களும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கட்டுப்படுத்த இந்தப் பதவிகளை உருவாக்கி வைத்திருந்தார்கள்.

**“மத்திய அரசின் ‘கையாளைத்தான்’ நாகரிகமான சொற்களால் ‘மாநிலத்தின் ஆட்சித் தலைவர்’ எனவும், ‘மேதகு ஆளுநர்’ எனவும், அரசமைப்புச் சட்டம் ஆக்கி வைத்திருக்கிறது”** என்றும் கு.ச.ஆனந்தன் எழுதி இருக்கிறார்.

அரசமைப்புச் சட்டத்தில் இன்றைய ஆளுநர்கள் இடம் பெற்றதே ஒரு சுவையான கதை என்பதையும் அவர் விவரித்துள்ளார்.

அரசமைப்பு ஆலோசகர் பி.என். இராவ் அவர்கள், 30-5-1947-இல் உருவாக்கிய தனது அரசமைப்புக் குறிப்பில், **“மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களால் ஆளுநர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்”** என்று குறிப்பிட்டிருந்தார். ஐந்து மாதங்களில், நிலைமை மாறியது. வல்லபாய் படேல் தலைமையில் இயங்கிய “மாநில அரசமைப்புக் குழு”, அந்த ஏற்பாட்டை விரும்பவில்லை. அதற்கேற்ப 1947-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், பி.என். இராவ் அவர்களின் குறிப்பு மாறுதலடைந்தது.

அதன் பின்னர், மாநில வாக்காளர்களாலேயே மாநில ஆளுநரும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் எனப் பல அரசமைப்புச் சபை உறுப்பினர்கள் வலியுறுத்தினார்கள். சென்னை மாகாண முன்னாள் ஆளுநர் ஸ்ரீ பிரகாசா, முன்னாள் குடியரசுத் தலைவர் வி.வி.கிரி, என்.வி.காட்கில், டாக்டர். கே.எம்.முன்சி, கைலாசநாத கட்சு போன்ற பெருந்தலைவர்கள் இப்படிச் சொன்னார்கள். அடுத்த நான்கு மாதங்களில் அந்தக் கருத்தும் மாறிற்று.

ஆளுநராக நியமனம் பெற, மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களால் நான்கு பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்; அவர்களில் ஒருவரை ஆளுநராகக் குடியரசுத் தலைவர் நியமிப்பார் என்ற ஒரு கருத்து உருவாயிற்று, ஆனால் இதுவும் பின்னர் மாறியது. அரசமைப்புச் சபை இறுதியாக விவாதித்தபோது, ஆளுநரை குடியரசுத் தலைவரே நியமனம் செய்ய வேண்டும் என்று எழுதப்பட்டு விட்டது. இத்தகைய பதவி ஒன்றிய ஆளும் கட்சிகளின் கைப்பாவையாக ஆக்கப்பட்டு விட்டது.

**“நொந்து போன அரசியல்வாதிகளுக்கு சில நேரங்களில் கொடுக்கப்படும் ஆறுதல் பரிசுதான் ஆளுநர் பதவியாகும். திறமையற்ற இடைத்தரமான அரசியல்வாதிகளுக்கு அளிக்கப்படும் நன்கொடை மானியங்களைப் போன்றதே ஆளுநர் பதவியாகும்”** என்று மத்திய – மாநில உறவுகளை ஆராய 1972 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட குழு அறிக்கையே சொன்னது.

மாநில சுயாட்சி குறித்து ஆராய இராஜமன்னார் குழுவை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1974 ஆம் ஆண்டு அமைத்தார்கள். அந்த அறிக்கை மீதான தனது விளக்கத்தை அன்றைய தி.மு.க. அரசு முன் வைத்தது.

**“ஆளுநர் நியமனம் குறித்து நமது அரசியலமைப்பில் வகை செய்யப் பட்டுள்ளது - மக்களாட்சி முறையில் காலத்திற்கு ஒவ்வாத ஒன்றாகும். இவர், மத்திய அரசால் நியமிக்கப்பட்டு மத்திய அரசுக்குப் பொறுப்புள்ள அதிகாரியாவார். எனவே, உள்ளூர் நிலைமைகளையும் அரசியல் நிலைமையையும் இவர் அறிந்திருக்க முடியும் என்று எதிர்பார்க்க இயலாது. ஆளுநர் பதவிக்காகச் செய்யப்படும் செலவும் சமதர்ம சமுதாய முறைக்கு ஏற்றதாக இல்லை. இச்செலவு வீணானது. இதனைக் கைவிடலாம். ஆளுநர் பதவியை எடுத்து விடுவதற்கு உற்ற தருணம் இதுவேயாகும்”** என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டது. ஆனாலும் ஆளுநர்கள் குறித்து அகில இந்தியா முழுமைக்கும் ஒத்த கருத்து உருவாகாததால் ஆளுநர் பதவி நீட்டித்துக் கொண்டே வந்துள்ளது.

ஆனால் கடந்த பத்தாண்டு காலத்தில் ஆளுநர்களின் அடக்குமுறைகள் அதிகமாகி வருகின்றன. இது மாநிலக் கட்சிகள் – அகில இந்தியக் கட்சிகள் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஆளுநர்களை வைத்து இன்றைய பா.ஜ.க. அரசு என்ன மாதிரியான காரியங்களைச் செய்து வருகிறது என்பதை உச்சநீதிமன்ற வழக்கறிஞர் ராஜீவ் தவான் ஒரு முறை எழுதினார்.

**“மோடி பிரதமராக பதவி ஏற்றதுமே ஏறக்குறைய அனைத்து மாநில ஆளுநர்களையும் மற்றும் துணை நிலை ஆளுநர்களையும் மாற்றம் செய்தார். இந்த மாறுதல் பட்டியலில் உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி சதாசிவமும் இருந்தார். அவர் என்ன கட்டாயத்தின் பேரில் மாற்றம் செய்யப்பட்டார் என்பது யாருக்கும் தெரியாது. இவர்கள் அனைவரும் பா.ஜ.க.வின் அரசியல் சதி வேலைகளுக்கு தேவைப்பட்டனர்.**

**புதிதாக ஏழு யூனியன் பிரதேசங்களில் துணை நிலை ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். தில்லி சட்டமன்றத் தேர்தலில் தோற்ற முதலமைச்சர் வேட்பாளர் கிரண் பேடி புதுச்சேரி துணைநிலை ஆளுநராக்கப்பட்டார். அனில் வைசால்தான் ஒரு பா.ஜ.க. ஆதரவாளர் என்று ஒத்துக் கொண்டவர். நஜீப்ஜங் பா.ஜ.க. அரசின் கட்டளைப்படி செயல்பட்டார். ஜம்மு - காஷ்மீர் ஆளுநர் எம்.என்.வோரா, ஒடிசா ஆளுநர் எஸ்.சி.ஜெமின், நரசிம்மா (ஆந்திரா), கேசரிநாத் திரிபாதி (மே.வ.) மற்றும் கல்யாண் சிங் இவர்களெல்லாம் பா.ஜ.க.வின் தீவிர ஆதரவாளர்கள்”** என்று எழுதினார் ராஜீவ் தவான்.

*- தொடரும்*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.11.2023) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத் துறை சார்பில் 23.35 கோடி ரூபாய் செலவில் திருச்செங்கோடு, ஈரோடு, இராசிபுரம், பெருந்துறை ஆகிய இடங்களிலுள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் கட்டப்பட்டுள்ள கிடங்குகள், தானியங்கி வகைப்படுத்தும் மற்றும் தரப்படுத்தும் இயந்திரங்களுடன் கூடிய ஏலகளங்கள் மற்றும் ஆய்வுக்கூடம், சிந்தாதிரிப்பேட்டை மற்றும் தென்மேல்பாக்கம் நகர கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கட்டப்பட்டுள்ள புதிய சங்கக் கட்டடம் மற்றும் திருமண மண்டபம் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் டாக்டர் என்.சுப்பையன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மின்னணு வர்த்தகத்திற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட

# கூட்டுறவுத்துறைக்கு ரூ.23.35 கோடியில் புதிய கட்டிடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, நவ. 21 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.11.2023) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத் துறை சார்பில் 23.35 கோடி ரூபாய் செலவில் திருச்செங்கோடு, ஈரோடு, இராசிபுரம், பெருந்துறை ஆகிய இடங்களிலுள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் கட்டப்பட்டுள்ள கிடங்குகள், தானியங்கி வகைப்படுத்தும் மற்றும் தரப்படுத்தும் இயந்திரங்களுடன் கூடிய ஏலகளங்கள் மற்றும் ஆய்வுக்கூடம், சிந்தாதிரிப்பேட்டை மற்றும் தென்மேல்பாக்கம் நகர கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கட்டப்பட்டுள்ள புதிய சங்கக் கட்டடம் மற்றும் திருமண மண்டபம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், உறுப்பினர்கள் விளைவிக்கும் வேளாண் விளைப் பொருட்களை நியாயமான விலைக்கு சந்தைப்படுத்திட ஏற்பாடு செய்தல், விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்களை விநியோகித்தல், விளைப் பொருட்களின் மீது தானிய ஈட்டுக் கடன் வழங்குதல், வேளாண் விளைப் பொருட்களைப் பதப்படுத்தி மதிப்புக் கூட்டும் பணியினை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், விவசாயிகள் தங்களது விளைப்பொருட்களை விரைவாகவும், எளிதாகவும் சரியான எடையில், நியாயமான விலையில் விற்பனை செய்ய ஏதுவாக மின்னணு வர்த்தகத்திற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திடும் வகையிலும், சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாய பெருமக்கள் பயன் பெறும் வகையிலும், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 3.26 கோடி ரூபாய் செலவில் 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு, தானியங்கி வகைப்படுத்தும் மற்றும் தரப்படுத்தும் இயந்திரங்களுடன் கூடிய ஏலகளம், ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 6.93 கோடி ரூபாய் செலவில் 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு, தானியங்கி வகைப்படுத்தும் மற்றும் தரப்படுத்தும் இயந்திரங்களுடன் கூடிய ஏலகளம் மற்றும் ஆய்வுக்கூடம், இராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 3.26 கோடி ரூபாய் செலவில் 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு, தானியங்கி வகைப்படுத்தும் மற்றும் தரப்படுத்தும் இயந்திரங்களுடன் கூடிய ஏலகளம், பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 5.63 கோடி ரூபாய் மதிப்பில் 2,000 மற்றும் 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இரு கிடங்குகள் மற்றும் ஏலகளம்;

**மறைமலை நகரில் கூட்டுறவு திருமண மண்டபம்!**

நகர்வாழ் அடித்தட்டு மக்களின் பொருளாதார தேவையை பூர்த்தி செய்ய ஏதுவாக, சிந்தாதிரிப் பேட்டை நகர கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 2,306 சதுர அடி பரப்பளவில் 75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடம்;

பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மறைமலைநகரில், தென் மேல்பாக்கம் நகர கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 16,000 சதுர அடி பரப்பளவில் 3.52 கோடி ரூபாய் செலவில் சங்கத்தின் சொந்த நிதியில் கட்டப்பட்டுள்ள கூட்டுறவு திருமண மண்டபம்; என மொத்தம் 23.35 கோடி ரூபாய் செலவில் கூட்டுறவுத் துறை கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் டாக்டர் என்.சுப்பையன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை - அண்ணாசாலை - பி.டி.லீ. செங்கல்வராயரன் கட்டடத்தில் மூன்றாம் தளம்!

# ‘தமிழ்நாடு மின் ஆளுமை முகமை’ அலுவலகத்திற்கு கூடுதல் பணியிட வசதி!

## தகவல் தொழில்நுட்பவியல் - டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் துவக்கி வைத்தார்!

சென்னை, நவ.21-

தமிழ் நாடு மின் ஆளுமை முகமை அலுவலகத்திற்கு கூடுதல் பணியிட வசதிக்காக சென்னை அண்ணா சாலை, பி.டி.லீ.செங்கல்வராய கட்டடத்தில் மூன்றாம் தளத்தினை, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாகராஜன் நேற்று (20.11.2023) துவக்கி வைத்தார்.

அதன் விபரம் வருமாறு:

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மற்றும் மின் ஆளுமை இயக்குநரகம் தற்போது சென்னை அண்ணாசாலையில் உள்ள பி.டி.லீ செங்கல்வராய டிரஸ்ட் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

தமிழ்நாடு அரசின் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் அரசாணை எண்.10, நாள் : 10.03.2023 இல் தமிழ்நாடு மின் ஆளுமை முகமைக்கு புதிய திட்டங்கள் மற்றும் அலகுகளை அனுமதித்து 62 புதிய பணியிடங்களை உருவாக்கி அரசு ஆணையிட்டுள்ளது.

எனவே சென்னை, அண்ணா சாலை, பி.டி.லீ செங்கல்வராய அறக்கட்டளை கட்டடத்தின் 3வது தளம் வாடகைக்கு அமர்த்தப்பட்டு, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் பணியாளர்களுக்கு கூடுதல் அலுவலக இடம் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக ரூ.2.29 கோடி செலவில் ஊழியர்களுக்கான பணியிடம் wi - fi, LAN மற்றும் Firewall போன்ற தொழில் நுட்ப வசதியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த பணி எல்காட் நிறுவனத்தின் தலைமைப் பொறியியல் ஆலோசகர் தலைமையிலான சிவில் இன்ஜினியரிங் குழுவின் மேற்பார்வையில் நடைபெற்றது.

இந்த 3வது தளம் 7010 சதுர அடி இட வசதியுடன் 80 பணிநிலையங்கள், 8 குழுத் தலைவர்களுக்கான அறைகள், 2 இணை இயக்குநர்களுக்கான அறைகள்,

12 இருக்கை கூட்ட அரங்கம், 96 இருக்கைகள் கொண்ட உணவு அருந்தும் அறையை உள்ளடக்கியதாகும். விஆர்எஃப் (VRF) ஏர் கண்டிஷனிங், ஸ்மோக் டிடெக்டர் (SMOKE DEECTOR), டச்ஃப்ரீ (TOUCH FREE) ரெஸ்ட்ரூம், எலக்ட்ரிக்கல் அறை ஆகியவற்றுடன், கூடிய இந்த தளம் சிசிடிவி கண்காணிப்புடன் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த தளத்தினை, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாகராஜன் நேற்று (20.11.2023) துவக்கி வைத்தார்.

இது தமிழ்நாடு முதலமைச்சரின் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருள் ஆதாரத்தை அடைய மற்றுமொரு மைல்கல் ஆகும்.

இந்த நிகழ்ச்சியின் போது தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் முதன்மைச் செயலர் தீரஜ் குமார், தமிழ் நாடு அரசின் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் தலைமை தொழில்நுட்ப அலுவலர் ராபர்ட் ஜெரார்ட் ரவி, ITS, தமிழ் நாடு மின்ஆளுமை முகமையின் முதன்மை செயல் அலுவலர் பிரவீன் பி நாயர், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் இணை முதன்மை செயல் அலுவலர் திருமதி.பெ. ரமண சரஸ்வதி மற்றும் தமிழ் நாடு மின்ஆளுமை முகமையின் ஆலோசகர் பி.டபிள்யூ.சி. டேவிதார் ஆகியோர் உடன் இருந்தனர்.

இரயில்வே ஊழியர்களின் உரிமைகளுக்காக

# நண்பர் கண்ணையா தொடர்ந்து குரல் கொடுத்திட வேண்டும்!

## எஸ்.ஆர்.எம்.யூ. பொதுச் செயலாளராக மீண்டும் தேர்வு ! கண்ணையாவுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து !



சென்னை,நவ.21-

**எஸ்.ஆர்.எம்.யூ. பொதுச் செயலாளராக கண்ணையா, மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டதையடுத்து, அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “இரயில்வே ஊழியர்களின் உரிமைகளுக்காக நண்பர் கண்ணையா அவர்கள் தொடர்ந்து குரல் கொடுத்திட வேண்டும்” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:

எஸ்.ஆர்.எம்.யூ பொதுச்செயலாளராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கண்ணையா அவர்களுக்கு எனது வாழ்த்துகள்!

என்னுடைய நீண்டகால நண்பரான அவர் இரயில்வேயில் பணிக்குச் சேர்ந்த நாள்முதல், இரயில்வே தொழிலாளர்களின் நலனையும் உரிமையையும் காப்பதில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார். அந்த ஈடுபாடு காரணமாகத் தன்னை எஸ்.ஆர்.எம்.யூ.வில் இணைத்துக் கொண்டு தொழிலாளர்களுக்காகக் குரல் கொடுக்கத் தொடங்கினார். அதன் காரணமாக இரயில்வே தோழர்களின் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்று இப்போது மீண்டும் பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அன்று முதல் இப்போது வரை அந்தப் பொறுப்பில் தொடர்ந்து 25 ஆண்டுகாலமாக அவர் நீடித்து வருவது தொழிலாளர்கள் மேல் அவர் கொண்டுள்ள உண்மையான அக்கறைக்குச் சான்றாகும்.

நான் எப்போது இரயிலில் பயணம் மேற்கொண்டாலும் எனக்கு முதலில் வரவேற்பு அளிப்பவர்கள் எஸ்.ஆர்.எம்.யூ தோழர்களே! அப்படிப்பட்ட இரயில்வே ஊழியர்களின்உ ரிமைகளுக்காக நண்பர் கண்ணையா அவர்கள் தொடர்ந்து குரல் கொடுத்திட வேண்டும். அவர்களது நலனைப் பாதுகாத்திட வேண்டும். அவரது பணி சிறக்க வேண்டும் என்று நெஞ்சார வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் சு.முத்துசாமி - கவிப்பேரரசு வைரமுத்து தலைமையில் - கோவையில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா - ‘இதழாளர் - கலைஞர்’ கருத்தரங்கம்!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - செஞ்சி கே.எஸ்.மஸ்தான் - த.மனோ தங்கராஜ் முன்னிலையில் நடைபெற்றது!

## ‘இதழாளர் கலைஞர்’ சிறப்பு மலர் வெளியீடு!

**கோவை, நவ.21**

**கோயம்புத்தூர் மாவட்டம், இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அரங்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா” “இதழாளர் - கலைஞர்” குழுவின் சார்பில் “இதழாளர் - கலைஞர்” கருத்தரங்கம் நேற்று (20.11.2023) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் / இதழாளர் - கலைஞர் நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர் மு.பெ.சாமிநாதன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் / இதழாளர் - கலைஞர் நூற்றாண்டு விழாக் குழு இணைத் தலைவர் செஞ்சி. கே.எஸ்.மஸ்தான் , பால்வளத்துறை அமைச்சர் / இதழாளர் - கலைஞர் நூற்றாண்டு விழாக் குழு இணைத் தலைவர் த.மனோ தங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.**

இக்கருத்தரங்கில் “இதழாளர் -கலைஞர்” என்னும் சிறப்பு மலரினை கே.ஜி. மருத்துவமனை தலைவர் பத்மஸ்ரீ டாக்டர் ஜி.பக்தவத்சலம் வெளியிட, இந்துஸ்தான் கல்வி நிறுவனங்கள் செயலர் திருமதி சரசுவதி கண்ணையன் பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து கவிப்பேரரசு வைரமுத்து தலைமையில், திருமதி பர்வீன் சுல்தானா , கவிஞர் கவிதாசன் மற்றும் புலவர் செந்தலை ந.கவுதமன் ஆகியோர் பங்கேற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு “இதழாளர்கலைஞர்” கருத்தரங்கம் கலைஞர் அவர்களின் பன்முக தன்மைகளை பற்றிய கருத்தரங்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இக்கருத்தரங்கில், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர் / இதழாளர் - கலைஞர் நூற்றாண்டு விழாக்குழு உறுப்பினர்செயலர் த.மோகன்., மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்திகுமார் பாடி, மாநகராட்சி மேயர் திருமதி.கல்பனா ஆனந்தகுமார், இதழாளர்கலைஞர் குழுவின் உறுப்பினர்களாகிய நக்கீரன்கோபால், கி.பாபுஜெயகுமார் (டெக்கான் க்ரோனிக்கல் நாளிதழ்) அருண்ராம் (டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழ்) கோவி.லெனின் (பத்திரிக்கையாளர்), துணை மேயர் இரா.வெற்றிசெல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா. கார்த்திக், தேசிய தூய்மை பணியாளர் நலவாரிய துணைத்தலைவர் திருமதி. கனிமொழி, மண்டலக்குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள்மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவரும், 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு 13 முறையும் வெற்றி பெற்றவரும், இந்திய அரசியலையே தீர்மானிக்கக் கூடியவராகவும் திகழ்ந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் நமக்கு படைத்தளித்திட்ட மக்கள் நலத் திட்டங்களையும் வருங்கால இளைய தலைமுறையினர் என்றென்றும் போற்றி புகழ்ந்திடும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை மாநிலம் முழுவதும் ஜீன் 2023 முதல் ஜீன் 2024 வரை ஒரு வருட காலம் தமிழ்நாடு அரசால் கொண்டாட முடிவுசெய்யப்பட்டது.

அதன்தொடர்ச்சியாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 02.06.2023 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு இலச்சினையை வெளியிட்டு அவர் நாட்டு மக்களின் நலன் காக்க ஆற்றிய பல்வேறு பணிகள் மற்றும் நாடு போற்றிய மகத்தான மக்கள் நலத் திட்டங்கள் குறித்த குறும்படத்தையும் வெளியிட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய பணிகளில் அவரின் பரிமாணங்களைப் போற்றும் வகையில், பல்வேறு தலைப்புகளில் அமைச்சர் பெருமக்கள் தலைமையில், இணைத் தலைவர்கள், உறுப்பினர்செயலர் மற்றும் உறுப்பினர்கள் கொண்ட 12 குழுக்கள் அமைக்கப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் 11.06.2023 அன்று அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில், தமிழ்நாடு அரசு, செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் “இதழாளர் -கலைஞர்” என்ற குழுவில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் குழுத் தலைவராகவும், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், பால்வளத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ் , இணைத் தலைவர்களாகவும், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர் த.மோகன், உறுப்பினர் செயலராகவும் மற்றும் இந்து என்.ராம், நக்கீரன் கோபால், கே.வைத்திய நாதன், ஆர்.விஜயசங்கர், கி.பாபு ஜெயக் குமார், அருண் ராம், கோவி.லெனின், மு.குணசேகரன், தி.செந்தில் வேலன் (வேல் வீச்சு) குழு உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டார்கள்.

**புகைப்படக் கண்காட்சி!**

இக்குழு ஆலோசனைகளின்படி, முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு “இதழாளர் - கலைஞர்” விழாக்குழு, கோயம்புத்தூர் மாவட்டம், வ.உசி. மைதானத்தில் “இதழாளர் -கலைஞர்” சிறப்பு புகைப்படக் கண்காட்சி அரங்கத்தினை கடந்த 18.10.2023 அன்று வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில், இதழாளர்-கலைஞர் நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர் / தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இதழாளர் - கலைஞர் நூற்றாண்டு விழாக்குழு இணைத்தலைவர்/சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், இதழாளர்-கலைஞர் நூற்றாண்டு விழாக்குழு இணைத்தலைவர் / பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் பாரதியவித்யா பவன் மற்றும் குமரகுரு கல்வி நிறுவனங்கள் தலைவர் டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர் திறந்து வைத்தார்.

இப்புகைப்படக் கண்காட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பல்வேறு பரிமாணம், தமிழ் அறிஞர்களுடன் கலைஞர், அரசியல் ஆளுமைகளுடன் கலைஞர், பிரதமர்களுடன் கலைஞர், குடியரசுத் தலைவர்களுடன் கலைஞர், கலைஞர் செயல்படுத்திய பல்வேறு நலத்திட்டங்கள் போன்ற தலைப்புகளில் புகைப்படங்கள் இடம் பெற்றன. இதழாளர் - கலைஞர் சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட 50,000 க் கும் மேற்பட்ட நபர்கள் பார்வையிட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வரலாற்றினை பற்றி அறிந்துகொண்டுள்ளனர்.

**சிறப்பு மலர்!**

முத்தமிழறிஞர் கலைஞர் பத்திரிகையாளராக, தன்னுடைய வாழ்க்கையை துவக்கி, பள்ளி பருவத்திலேயே மாணவநேசன் என்ற பத்திரிகையில் பணியாற்றி முரசொலி வரை இதழாளராகவே திகழ்ந்தார். இதழாளராக தமது வாழ்க்கையை தொடங்கிய முத்தமிழிறிஞர் கலைஞர் அவர்களை பெருமை சேர்க்கும் வகையில் “இதழாளர் கலைஞர்” என்னும் சிறப்பு மலரினை கோயம்புத்தூர், கே.ஜி.மருத்துவமனை தலைவர் பத்மஸ்ரீ டாக்டர் ஜி. பக்தவத்சலம் வெளியிட்டார். அதனை கோயம்புத்தூர், இந்துஸ்தான் கல்வி நிறுவனங்கள் செயலர் திருமதி சரசுவதி கண்ணையன் பெற்றுக் கொண்டார்.

மேலும், இச்சிறப்பு மலரில் “முகில் கிழித்து வெளிவந்த முழு நிலவு” என்னும் தலைப்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள், “கலைஞருடன் நெருங்கிப் பழகிய ஆளுமைகள்” என்னும் தலைப்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுதிய “கலைஞர் அவர்களின் கட்டுரைகளை படித்தால் புழுவும் புலியாகும்”, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி எழுதிய “இதழாளராக கலைஞர்” என்றும் வாழ்வார், கவிஞர் வைரமுத்து எழுதிய “திரையாண்ட கலைஞர்”, ஓவியர் டிராஸ்கி மருது எழுதிய “கலைஞரும் நானும்”, சென்னை கல்சர் இதழ் ஆசிரியர் ரங்கராஜ் எழுதிய “கலைஞர் மக்களை எளிதில் சென்றடைய ஒன்லைனர்கள் பயன்படுத்துவதில் வல்லவர் ஆனார்”, மூத்த பத்திரிகையாளர் ஐ.சண்முகநாதன் எழுதிய நான் கண்ட ‘கலைஞர்’, “கலைஞரின் காலம் ஒரு பொற்காலம்” ஆகிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

## சமூக வலைதளங்களில் வலம் வருவது!




நீட் என்பது மாணவர்களை மருத்துவ துறையில் சேர்க்க நடத்தப்படும் நுழைவுத் தேர்வு அல்ல ! அது மத்திய சிபிஎஸ்இ மாணவர்களை சுலபமாக மருத்துவ துறையில் சேர்க்க சிபிஎஸ்இ பார்ப்பன ஆரியர்களால் நடத்தப்படும் நுழைவுத் தேர்வு !

மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை!

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணிக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் அ.யுவராஜ் அறிக்கை!

காஞ்சிபுரம், நவ.21-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அ.யுவராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞரணி அமைப்பாளர், துணை அமைப்பாளர் கூட்டம் இன்று (21.11.2023 - செவ்வாய்க்கிழமை) பிற்பகல் 12 மணி அளவில், காஞ்சிபுரம் டி.கே. நம்பி தெருவில் கலைஞர் பவள விழா மாளிகையில், மாவட்ட கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில், மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் ப.அப்துல்மாலிக், பிரபு கஜேந்திரன் மற்றும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பெ.மணி, கா.பால்ராஜ்,த.சஞ்சய்காந்தி, அ.ஆண்டோ சிரில்ராஜ், ம.அருள்முருகன், எஸ்.யுவராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. நவ.27 ஆம் தேதி கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை கொண்டாடுவது குறித்து.

2. டிச. 17-ம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள மாநில இளைஞர் அணி இரண்டாவது மாநாட்டில் இளைஞரணியினர் கலந்து கொள்வது குறித்து.

3. சேலம் இளைஞர் அணி மாநாட்டை முன்னிட்டு இரு சக்கர வாகன பிரச்சாரத்துக்கு வரும் கழக இளைஞர் அணியினர் நவ.24- நமது மாவட்டத்துக்கு வருவது குறித்து.

4. நீட் விலக்கு நம் இலக்கு, கையெழுத்து இயக்கம் குறித்து.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் நேற்று (20.11.2023) சென்னை அண்ணா சாலை, தமிழ் நாடு மின் ஆளுமை முகமை அலுவலகத்திற்கு, கூடுதல் அலுவலக மூன்றாம் தளத்தினை திறந்து வைத்தார். இந்த நிகழ்வின் போது, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலாளர் தீரஜ் குமார், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை தலைமை தொழில்நுட்ப அலுவலர் திரு. ராபர்ட் ஜெரார்ட் ரவி, ITS, தமிழ் நாடு மின் ஆளுமை முகமையின் முதன்மை செயல் அலுவலர் பிரவீன் பி நாயர், தமிழ் நாடு மின் ஆளுமை முகமையின் இணை முதன்மை செயல் அலுவலர் திருமதி.பெ. ரமண சரஸ்வதி, மற்றும் தமிழ் நாடு மின் ஆளுமை முகமையின் ஆலோசகர் P.W.C. டேவிதார், (ஓய்வு) ஆகியோர் உடனிருந்தனர்.

மாவட்ட அளவில் சிறந்த சேவையாற்றிய

# மருத்துவ அலுவலர்களுக்குப் பாராட்டு - விருதுகள் - சான்றிதழ்கள்!

## மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கி - வாழ்த்தி விழாப் பேருரை!

சென்னை, நவ. 21 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (20.11.2023) சென்னை, எழும்பூர் மகப்பேறு அரசு மருத்துவமனையில் உள்ள கூட்டரங்கில் உயர் பிறப்பு வரிசை குறைப்பு மற்றும் குடும்ப நல அறுவை சிகிச்சையில் சிறப்பாகப் பணியாற்றிய மருத்துவக்கல்லூரி முதல்வர்கள், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்களுக்கு விருதுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

குடும்பநலத்துறையின் சார்பாக மாநில அளவில் மிகச் சிறப்பாக செயல்படும் மருத்துவர்களுக்கு சிறந்த விருது வழங்கும் திட்டமானது 2008 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது இத்திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்கள். கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னாள் மொத்த கருவள விகிதம் என்பது 2.1 என்கின்ற அளவில் சதவிகிதமாக இருந்தது. ஆனால் தற்போது தமிழ்நாட்டில் மொத்த கருவள விகிதம் 1.4 என்கின்ற அளவில் கட்டுக்குள் இருக்கிறது. இந்தியாவிலேயே கருவள விகிதம் மிகக் குறைவாக கட்டுக்குள் இருக்கின்ற மாநிலத்தில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது. 2031-36 ஆம் ஆண்டு காலக்கட்டங்களில் இது மேலும் கட்டுக்குள் வரும் என்று இந்திய சென்செக்ஸ் அமைப்பு சொல்லியிருக்கிறது. ஆகையால் கருவள விகிதம் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதால்தான் மக்கள் தொகை பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. இதனால்தான் பொருளாதார விகிதத்தில் தமிழ்நாடு இந்திய மாநிலங்களில் முதலிடத்தில் இருக்கின்றது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக மருத்துவத்துறையில் பல்வேறு சாதனைகளைப் படைத்து வருகிறது. குடும்ப நலத்துறையில் பெண்களுக்கு குடும்பநலக் கட்டுப்பாடு 6,42,408 பேருக்கும் ஆண்கள் 2,535 பேருக்கும் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளது.

**சூப்பர் ஸ்பெஷாலிட்டி படிப்புகளுக்கு கலந்தாய்வு அனுமதி!**

இளங்கலை மருத்துவ படிப்புகளுக்கு 86 சேர்க்கைக்கு அனுமதிக்கப்பட்டது. இவர்களுக்கு கலந்தாய்வு முடிக்கப்பட்டுள்ளது. நானும் நமது துறையின் செயலாளர் அவர்களும் ஒன்றிய அமைச்சர் அவர்களை சந்திக்கும்போதெல்லாம் சூப்பர் ஸ்பெஷாலிட்டி படிப்புகளுக்கு நீதிமன்றம் சென்றுதான் அனுமதி வாங்கும் நிலை இருக்கின்றது. கடந்த ஆண்டு 50% த்தினை உச்சநீதிமன்றம் சென்றுதான் பெற்றோம். ஆகையால் இந்த ஆண்டு உச்சநீதிமன்றம் செல்லாமல் சூப்பர் ஸ்பெஷாலிட்டி படிப்புகளுக்கு அனுமதி தர வேண்டும் என்று கோரியிருந்தோம். அதனடிப்படையில் தற்போது அனுமதி வழங்கப்பட் டிருக்கிறது. மொத்தம் உள்ள காலியிடங்களில் தமிழ்நாட்டிற்கு 50% அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. PG பொறுத்தவரை கடிதம் கொடுத்திருக்கிறோம். இன்னும் பதில் வரவில்லை என்று தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.தி.சி. செல்வவிநாயகம், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.சண்முக்கனி, குடும்பலத் துறை இயக்குநர் மரு.ஹரிசுந்தரி, சென்னை அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், எழும்பூர் மகப்பேறு அரசு மருத்துவமனை இயக்குநர் மரு.கலைவாணி, காசநோய் பிரிவு கூடுதல் இயக்குநர் மரு. அமுதா, மருத்துவ பேராசிரியர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் பி ஜி சிவக்குமார் இல்ல திருமண வரவேற்பு விழா மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இதில் அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் இ.எஸ்.எஸ். இராமன், திருத்தணி எம்.பூபதி, ஒ.ஏ.நாகலிங்கம், எம்.டி.ஆர்.கே.பாபு, ஜெ.எம்.சங்கரன், மா.கிரண், சி.எம்.இரவி, ஜெ.டி.சஞ்சய்காந்தி, டி.எம்.சுகுமார், பி.ரவிந்திரநாத், ஜெ.எம்.கோவிந்தசாமி, டி.எம்.சுப்பிரமணி, பி.ராஜேஸ்வரி ரவிந்திரநாத், கிஷோர் ரெட்டி, எஸ்.ஆர்.செங்குட்டுவன், சி.ஜெ.செந்தில்குமார், கே.எஸ்.அசோக்குமார், பா.ஆர்த்தி ரவி, என்.கே.கிருஷ்ணன், பி.பழனி, சி.என்.சண்முகம், பி.டி.சந்திரன், எம்.ஜெ.ஜோதிகுமார், இ.முரளிசேனா, பன்னீர்செல்வம், சித்திக், டி.கே.நெடுஞ்செழியன், வி.எல்.ராஜா, பி.வெங்கடபெருமாள், எம்.வி.வெங்கடேசன், சி.பி.திருநாவுக்கரசு, வி.எஸ்.சிங்காரம், வி.கே.சுப்பிரமணி, பி.டி.வாசு, எம்.சி.வெங்கடேசன், எஸ்.வி.சிவா, ஏ.ஜி.சிவசக்திவேல், இ.ஏ.ஜீவா, பி.ஜி.பரதேசி, பல்லாரி கணேசன், பி.வி.இராஜசேகர், சி.ஒ.நாகப்பன், பி.கே.எஸ்.பழனி, பி.வி.பார்த்திபன், டி.எம்.கோபால், டி.கே.கார்த்திகேயன், எம்.ஆர். சுப்பிரமணி, எம்.சி.ராமன், ஒ.கே.சங்கரன், சி.எம்.வேலு, கே.எஸ்.சுவாமிநாதன், பி.ஜி.ஆனந்தன், எம்.சரவணன், பி.ஜி.சுப்பிரமணியம் செங்குந்தர், பி.எஸ்.மணி செங்குந்தர், தஞ்சம்மாள், பி.எஸ்.செல்வம் செங்குந்தர், கவிதா மற்றும் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். பி.எஸ்.சதீஷ்குமார் நன்றி கூறினார்.

# முதிர்ச்சியடைந்துள்ள மக்களாட்சியும், அவசியமற்றுப்போகும் ஆளுநர் பதவியும்!

முன்பெல்லாம் நாற்சந்தியில் ஒரு குடையின் கீழோ, வெட்டவெளியிலோ ஒரு டிராஃபிக் கான்ஸ்டபிள் கையில் ஸ்டாப் என்று கூறும் பிளேட்டுடன் நின்றிருப்பார்.

அவர் அதைக்காட்டும் திசையில் வரும் வாகனங்கள் பிரேக் போட்டு நிற்கவேண்டும். அவர் அந்த கட்டளையை நீக்கும் வரை காத்திருக்க வேண்டும். அதை மீறினால் அபராதம், தண்டனை.

அந்த டிராஃபிக் கான்ஸ்டபிள் “ஆகா! நம்மிடம் எவ்வளவு அதிகாரம் இருக்கிறது!” என்று அவர் விருப்பத்திற்கு ஒரு சாலையில் மட்டும் வாகனங்களை நிறுத்தினால் என்னவாகும்? பெரிய பிரச்சினை வெடிக்கும். வாகன ஓட்டிகள் கொந்தளிப்பார்கள். பயணிகள் கொந்தளிப்பார்கள்.

நல்லவேளையாக, இப்போதெல்லாம் தானியங்கி சிக்னல்கள் வந்துவிட்டன. அவை தானாகவே குறிப்பிட்ட கால அளவிற்குப் பின் பச்சை, மஞ்சள், சிவப்பு விளக்குகளை மாற்றி போக்குவரத்தை நெறிப்படுத்துகின்றன.

அவை மனிதர்கள் இல்லையாதலால் தங்களுக்குள்ள அதிகாரத்தை குறித்து மமதை கொள்வதில்லை. எந்த ஆரவாரமுமின்றி போக்குவரத்தை நெறிப்படுத்துகின்றன.

**ஆளுநரின் பணியும் டிராஃபிக் கான்ஸ்டபிள் பணி போலத்தான். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, தனக்கு பெரும்பான்மை இருக்கிறது என்ற காரணத்தால் மக்களாட்சி விழுமியங்களுக்கு மாறாக சட்டம் இயற்றினால் அவர் அதற்கு ஸ்டாப் சிக்னல் காட்டலாம். மீண்டும் பரிசீலிக்கச் சொல்லலாம்.**

**பிரச்சினை பெரிதாக இருந்தால் குடியரசுத் தலைவருக்கு அனுப்பலாம். ஆனால் தனக்கு அதிகாரம் இருக்கிறது என்பதற்காக அரசின் செயல்பாட்டையே தடுத்து நிறுத்தும் வகையில், மக்களால் அரசுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை மறுக்கும் வகையில் செயல்பட முடியாது, கூடாது!**

எப்படி போக்குவரத்துக் காவலர் பொறுப்புணர்ந்து செயல்படுவார் என்று நம்பி அவர் கையில் அதிகாரம் அளிக்கப்படுகிறதோ, அதே போலத்தான் ஆளுநருக்கும் அதிகாரம் அளிக்கப்படுகிறது. அவர் எத்தனை நாட்களில் சட்டமன்றம் இயற்றும் சட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று காலக்கெடு எதுவும் விதிக்க வில்லை.



ஏனெனில், அவர் வேண்டுமென்றே தாமதிப்பார் என்றெல்லாம் அரசியலமைப்புச் சட்டம் எழுதிய காலத்தில் யாரும் சிந்திக்கவில்லை! அவர் விருப்பப்படி சட்டங்களை நிறுத்திவைப்பார், (withhold) செய்வார் என்றெல்லாம் நினைத்துப் பார்க்கவில்லை!

மாறாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுதான் தனக்கு சட்டமன்றத்தில் பெரும்பான்மை இருக்கிறது என்பதற்காக பொதுநலனுக்கு எதிராக சட்டங்களை இயற்றிவிடுமோ என்று அஞ்சினார்கள்! அதனால் ஒரு எச்சரிக்கைக்காக சில தடுப்புகளை ஏற்படுத்தினார்கள்! ஆங்கிலத்தில் இதை செக் அண்ட் பாலன்ஸ் என்பார்கள்.

அதாவது அதிகாரம் ஓரிடத்தில் குவியாமல் சில தடுப்புகளை ஏற்படுத்தி சமன் செய்வது. இப்படியெல்லாம் அரசியலமைப்புச் சட்டம் இயற்றியவர்கள் சிந்திக்க காரணங்கள் என்னவாக இருந்திருக்கும்? அந்த சூழல் என்ன என்பதை பரிசீலிப்போம்.

### அரசியலமைப்புச் சட்டம் உருவான காலம் எது?

அரசியலமைப்புச் சட்டம் எழுதப்பட்ட காலத்தில் இந்திய நாடு இன்றுள்ளது போல தெளிவான மாநில அமைப்புகளை கொண்டதாக இல்லை. பிரிட்டிஷ்காரார்கள் அவர்கள் வசதிக்காக பிரித்திருந்த பிரசிடென்சிகளாக, நிலப்பகுதிகளாகத்தான் இருந்தன. உதாரணமாக தெற்கு ஆந்திரா மெட்ராஸ்பிரிசிடென்ன்ஸியில்தான் இருந்தது.

எந்த அடிப்படையில் ஒன்றியத்துடன் அதிகாரங்களை பகிர்ந்துகொள்ளும் உறுப்புகளான மாநிலங்களை உருவாக்க வேண்டும் என்பதில் தெளிவு இருக்கவில்லை.



நாடு முழுவதும் சிறிதும், பெரிதுமான சுயாட்சி பெற்ற சமஸ்தானங்கள் இருந்தன. அவை இந்தியாவுடன் இணையுமா, இணையாதா என்ற கேள்வியும், இணைந்தாலும் மக்கள் முழு விருப்புடன் இந்திய குடிமக்களாக விளங்குவார்களா என்பதெல்லாம் நிச்சய மற்ற கேள்விகளாக இருந்தன. பல சமஸ்தானங்களில் மன்னர்கள் விருப்பமும், மக்கள் விருப்பமும் வேறுபட்டிருந்தன.

**சுருக்கமாகச் சொன்னால் இந்தியா என்ற ஒன்றியத்தினை உருவாக்கும் மக்கள் தொகுதிகள் இவைதான் என தெளிவாகக் கூற முடியவில்லை. இன்றைக்கு அரசியல் தத்துவ சிந்தனையாளர் பார்த்தா சாட்டர்ஜி இந்தியா என்பது மக்கள் தொகுதிகளின் கூட்டாட்சி என்று திட்டவட்ட மாகக் கூறுகிறார் என்றால் அதற்குக் காரணம் இன்று தனித்தனி மொழி பேசும் மக்கள் தொகுதிகள் தெளிவாக மாநில அரசியல் களமாக உருவாகி விட்டார்கள் என்பதுதான். ஆனால் 1947இல் இது தெளிவாக இல்லை.**

சொத்துவரி கட்டுபவர்கள் மட்டும் வாக்களித்து பேச்சுக்கு ஓரளவு பிரதிநிதித்துவம் உள்ள அரசியலமைப்பு சட்ட வரைவிற்கான அவையை தேர்ந்தெடுத்து விட்டார்கள். அரசியலமைப்பு சட்டம் உருவான பிறகு வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை, Universal Adult Franchise என்பது இன்றியமையாதது, அப்போதுதான் இந்தியா மக்களாட்சிக் குடியரசாக அமையும் என்று தீர்மானமாக இருந்தார்கள். ஆனால் நாட்டில் எண்பது சதவீதம் மக்களுக்கு எந்த மொழியும் எழுதப் படிக்கத் தெரியாது. அதனால் மாநில அரசுகள் எப்படி உருவாகும் என்பது உறுதியாக இல்லை.

காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே பலவிதமான போக்குகள் இருந்தன. உதாரணமாக உத்திரப்பிரதேச கட்சியில் செல்வாக்காக இருந்த பலர் பழமைவாத, சனாதன நோக்கு கொண்டவர்களாக, முற்போக்காளரான நேருவுடன் இணக்கம் இல்லாதவர்களாக இருந்தார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் எந்த விதமான கருத்தியல் போக்குள்ளவர்கள் ஆட்சிக்கு வருவார்கள் என்ற கவலை இயல்பாகவே அனைவருக்கும் இருந்திருக்கலாம்.

அஸ்ஸாம் மாநிலத்தில் பூர்வகுடிகள் தங்களுக்கான சுயாட்சி பகுதிகளை கோரினார்கள். ஒன்றிய அரசுடன் அவர்கள் உறவை எப்படி நிர்ணயிப்பது என்பது குறித்த ஆய்வுகள் தனியாக நடந்த வண்ணம் இருந்தன.

இப்படி நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் பலவிதமான கேள்விகளுக்கு விடை தேட வேண்டி இருந்தது. சுருங்கச் சொன்னால் இந்தியா என்ற குடியரசு உருவாகியது; அதன் உறுப்புகள் எவை என்பதும், அவற்றிற்கிடையேயான உறவுகள் எப்படி இருக்கும் என்பது தெளிவாக, உறுதியாக இல்லை.

### பாகிஸ்தான் பிரிவினையின் தாக்கம்!

எல்லா பிரச்சினைகளையும் ஓரம் கட்டும் விதத்தில் அவசரமாக எல்லைகள் வகுக்கப்பட்டு, தனி நாடாக அறிவிக்கப்பட்ட பாகிஸ்தான் பகுதிகள் உருவாக்கம் அமைந்தது.

பாகிஸ்தான் பகுதிகளிலிருந்து இந்து மக்களும், இந்திய பகுதிகளிலிருந்து முஸ்லீம்கள் பெரும் எண்ணிக்கையில் இடம் பெயரத் துவங்கினார்கள். கட்டுப்படுத்த முடியாத பயங்கர வன்முறை வெறியாட்டங்களும் துவங்கின.

இது நிச்சயம் புதிய அரசை உருவாக்க முனைந்தவர்கள் மனதில் பிரிவினை குறித்த பெரும் அச்சத்தை உருவாக்கி இருக்கும். பல்வேறு மொழிகள், பண்பாடுகளைக் கொண்ட இந்தியா துண்டு துண்டாக சிதறிப்போகும் என்று பலர் கூறிவந்தார்கள்.

இத்தகைய சூழ்நிலையில்தான் ஒன்றிய அரசின் அதிகாரத்தை சற்றே வலுவாக வைக்க வேண்டும் என்று பலரும், அம்பேத்கர் உட்பட கருதுவது சாத்தியமானது. அதே நேரம் இந்தியாவின் பன்மை குறித்து அவர்கள் நன்றாகவே அறிந்திருந்தார்கள்.

**அதனால்தான் திட்டவட்டமாக இந்தியா ஒரு கூட்டாட்சி குடியரசுதான் என்று கூறினார்கள். ஆனால் அந்த கூட்டாட்சியின் உறுப்புகளான மக்கள் தொகுதிகள் எவையெவை என்பதை திட்டவட்டமாக உணர முடியாததால் ஒன்றிய அரசிடம் சில ஒருங்கிணைக்கும் இழைகளை கொடுக்க நினைத்தார்கள்.**

**அப்படி உருவானதுதான் இந்த ஆளுநரை ஒவ்வொரு மாநிலத்திலும் நியமிக்கும் எண்ணம். எப்படி குடியரசுத் தலைவர் ஒன்றிய அரசின் சட்டபூர்வமான இறையாண்மைக் குறியீடாக இருப்பாரோ, அதேபோல மாநில ஆளுநர் மாநில அரசுகளுக்கு இருப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.**

அத்துடன் மாநில அரசுகளை ஒன்றிய அரசுடன் இணைக்கும் கண்ணியாகவும் இருப்பார் என்பதும் திட்டம். மாநிலங்களில் பெரும் நெருக்கடிகள் உருவானால், ஆளுநர் மூலமாக அதனை ஒன்றிய அரசு கையாள இயலவேண்டும் என்ற எண்ணம்.

இவையெல்லாமே மாநிலங்கள் திட்டவட்டமாக உருப்பெற்று அங்கே அனைவரும் வாக்களிக்கும் தேர்தல்கள் நடந்து மக்களாட்சி நடைமுறைக்கு வருவதற்குமுன் சிந்திக்கப்பட்ட விஷயங்கள் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

### எழுபதாண்டுகளில் மக்களாட்சி அடைந்துள்ள முதிர்ச்சி!


அரசியலைப்பு சட்டம் உருவாகி 1952ஆம் ஆண்டு தேர்தல்கள் நடக்கத் துவங்கிய பிறகு எழுபதாண்டுகளில் இந்தியாவில் மக்களாட்சி சிறப்பாக வேரூன்றி, முதிர்ச்சியடைந்துள்ளது என்றே கூற வேண்டும். இதன் பொருள் இதில் போதாமைகளோ, சிக்கல்களோ இல்லை என்பதல்ல. ஆனால் இவ்வளவு பெரிய, அளப்பரிய பன்மை மிகுந்த நாட்டில் பல்வேறு மக்களாட்சி நடைமுறைகள் வெற்றிகரமாக வலுப் பெற்றுள்ளன என்பதுதான் சிறப்பு. இதில் சில முக்கிய அம்சங்களைப் பார்ப்போம்.

முதலில் எக்ஸக்யூடிவ் எனப்படும் அரசு இயந்திரம். இந்திய ஆட்சிப் பணியாளர்கள் என்ற வலைப்பின்னல் சிறப்பாக கட்டமைக்கப்பட்டு, ஒன்றிய, மாநில அரசுகளின் கட்டுமானத்திற்கான ஆதாரமாக விளங்குகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் முதன்மைச் செயலர் என்பவர் ஒன்றிய அரசுடன் இடையறாத் தொடர்பில் உள்ளார்.

வெவ்வேறு மாநிலங்களைச் சேர்ந்த ஆட்சிப்பணி அதிகாரிகள் வெவ்வேறு மாநிலங்களில் பணியில் அமர்த்தப்படுவதும், ஒன்றிய அரசிலும் பணி செய்வதுமாக ஒரு நிர்வாக வலைப்பின்னல் உருவாகி இயங்கி வருகிறது. இந்த வலைப்பின்னலில் காவல் துறை அதிகாரிகளும் அடக்கம்.

அதேபோல தொழில், வர்த்தகம் ஆகியவை அடங்கிய குடிமைச் சமூகமும் பல்வேறு மாநிலங்களுக்கிடையேயான உறவுகளை பன்மைப்படுத்தி, வலுப்படுத்தியுள்ளது கண்கூடு. நாட்டின் ஏதோவொரு மூலையில் உற்பத்தியாகும் பொருள் நாடெங்கும் வினியோகம் பெறுகின்றது. அதற்கான வலைப்பின்னல்கள் நாளுக்குநாள் வலுவடைந்து வருகின்றன.

**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*



உலகளாவிய பொருளாதார வலைப்பின்னலின் பகுதியாக இந்திய பகுதிகளுக்கிடையிலான வலைப்பின்னலும் விரிவானதாகவே உள்ளது. கடந்த சில பத்தாண்டுகளாக மாநிலங்களிடையே தொழிலாளர்கள் இடப்பெயற்சியும் கணிசமாக அதிகரித்துள்ளது.

இவற்றின் இணை நிகழ்வாக ஒவ்வொரு மாநிலத்திலும் அரசியல் கட்சிகள் மாநில அளவில் அரசையும், மக்களையும் இணைக்கும் வலைப்பின்னல்களாக வளர்ந்துள்ளன. பல மாநிலங்கள் பத்து, பன்னிரெண்டு பொதுத்தேர்தல்களை சந்தித்துவிட்டன. மக்களின் பங்கேற்பு இந்த தேர்தல்களில் கணிசமாக இருப்பதுடன், கட்சிகள் மாறி, மாறி பெரும்பான்மை பெற்று அரசாள்வதும் நடக்கிறது.

நீதிமன்றங்களின் வலைப்பின்னலும் நாடு முழுவதும் வேரூன்றியுள்ளது. சில வழக்குகள் தல மட்ட நீதிமன்றங்களிலிருந்து மேல்முறையீட்டிற்கு உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் வரை செல்வது சாத்தியமாகிறது. இதில் கால தாமதம், பொருட்செலவு போன்ற பிரச்சினைகள் இருந்தாலும், சட்டத்தின் ஆட்சி குறித்த உத்திரவாதம் மக்களுக்குக் கிடைக்கிறது.

ஒவ்வொரு மாநிலத்திலும், வெவ்வேறு மொழிகளிலும் ஊடகங்கள் வலுவாக இயங்குகின்றன. அச்சு ஊடகங்கள், தொலைக்காட்சி ஊடகம் தவிர சமீப காலத்தில் இணைய பயன்பாடும், சமூக ஊடகங்களும் பிரம்மாண்ட வளர்ச்சி கண்டுள்ளன. கிராமங்களில் கூட மக்கள் செல்பேசிகளை பயன்படுத்தி செய்திகளை உடனுக்குடன் அறிந்துகொள்வதை காண முடிகிறது.

**இப்படி பல்வேறு அம்சங்களிலும் கூட்டாட்சி அமைப்பு திட்டவட்டமாக உருவாகி இயங்கும்போது, மாநிலங்களை ஒன்றிய அரசின் சார்பாக மேற்பார்வை பார்க்க ஆளுநர் பதவி என்பது முற்றிலும் அவசியமற்றதாகிறது. மாநில அரசு ஒரு தவறான சட்டம் இயற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் உடனே நீதிமன்றத்தை நாடிவிடுவார்கள். தீவிரமான பிரச்சினையாக இருந்தால் தடை பெற்று விடுவார்கள். பொது நல வழக்குகளுக்கும் கூட குறைவில்லை.** A mature democracy and Unnecessary governor's position

**மேலும் நிதிப்பகிர்வு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில் ஒன்றிய அரசும், மாநில அரசும் இணைந்து இயங்க வேண்டியுள்ளது, பொருளாதார வளர்ச்சியின் இயங்குவிசை யாரையும் தனித்து செயல்பட விடாது. இந்த நிலையில் மாநில அரசுகள் தான்தோன்றித்தனமாக அதிகார அத்துமீறல் எதையாவது செய்துவிடும் என்று நினைப்பதெல்லாம் சிறுபிள்ளைத்தனம். அது மாநிலங்களின் உரிமைகளில் தலையிடுவதன்றி வேறல்ல.**



உலகின் பல்வேறு நாடுகளுடன் ஒப்பிட்டால் இந்திய அரசியலின் ஸ்டெபிலிடி என்று ஆங்கிலத்தில் கூறப்படும் உறுதிப்பாடும், தேர்தல் சார் மக்களாட்சியின் காலம் தவறா ஒழுங்கும் மிக அபூர்வமானவை என்று கூறவேண்டும். இந்த வாரம் கூட மத்தியப் பிரதேச தேர்தலில் 74% வாக்குப் பதிவாகி உள்ளது. காங்கிரசும், பா.ஜ.க.வும் கடுமையாக போட்டியிட்டுள்ளன. யார் ஆட்சி அமைத்தாலும் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு ஆட்சி செய்வார்கள் என்று கூறலாம். சில சமயங்களில் கட்சிகள் பெரும்பான்மை இழந்தாலும், சமூக அமைதி சீர்கெடுவ தில்லை. ஆட்சி நிலை குலைந்து போவதில்லை.

### பேரரசின் பிரதிநிதிகளா ஆளுநர்கள்?

இப்படி தானாகவே தானியியங்கி சிக்னல்கள் போக்குவரத்தை ஒழுங்கு செய்வதுபோல அனைத்தும் சீராக நடக்கையில், ஆளுநர் என்ற தேவையில்லாத போக்குவரத்து காவலர் எதற்காக என்பதே கேள்வி. பா.ஜ.க. பேரரசு மனப்பான்மையில் ஆளுநர்கள் மூலம் எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களில் இடையூறுகள் செய்வது அபூர்வமாக உருவாகியுள்ள தேசிய கூட்டாட்சி வலைப்பின்னலையே சிதைத்து விடும்.

பாரதீய ஜனதா கட்சி 1930, 1940களிலேயே தேங்கி நிற்கிறது. அன்றைய நிலையில் சாவர்க்கர், கோல்வால்கர் உள்ளிட்டோர் உருவாக்கிய இந்து மத அடையாள அரசியலுக்கு இன்றைய நிலையில் எந்த பொருத்தப்பாடும் கிடையாது. நியாயமாகச் சொன்னால் இன்றுள்ள அறிவியல், தொழில்நுட்ப, பொருளாதார வளர்ச்சிக்கு உலகமே ஒரு கூட்டாட்சியாக மாற வேண்டும்.

ஆனால் பா.ஜ.க. காலத்திற்கு உதவாத ஒற்றை அடையாள தேசியவாதத்தை சுமந்து கொண்டு அலைகிறது. அதன் வெளிப்பாடாகவே அவசியமற்றுப்போன ஆளுநர் பதவிக்கு அதிகாரம் தந்து கூட்டாட்சி தத்துவத்தை சிதைக்கப் பார்க்கிறது. ஒரே நாடு, ஒரே தேர்தல் என்று போகாத ஊருக்கு வழி தேடுகிறது. இது உண்மையிலேயே தேசப்பற்றுதானா என்பதை பா.ஜ.க. கட்சிக்காரர்கள் சிந்திக்க வேண்டும்.

**தமிழ்நாட்டு மக்களின் ஆதரவைப் பெற்ற திராவிட சமூக நீதிச் சிந்தனையை ஆளுநர் ரவியின் மூலம் அவமதிப்பதால் என்ன அரசியல் பலன்களை பெற்றுவிட முடியும் என்று ஒன்றிய அரசை ஆளும் பா.ஜ.க. நினைக்கிறது என்பது வியப்பாக இருக்கிறது. தன் எல்லைமீறி அரசியல்வாதியாக செயல்பட்டுவரும் ஆளுநர் ரவியை திரும்பப் பெறுவதே தமிழ்நாட்டு, இந்திய அரசியலின் எதிர்காலத்திற்கு பா.ஜ.க. செய்யும் நல்லதொரு பங்களிப்பாக இருக்கும்.**

நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (20.11.2023) சென்னை, எழும்பூர் மகப்பேறு அரசு மருத்துவமனையில் உள்ள கூட்டரங்கில் உயர் பிறப்பு வரிசை குறைப்பு மற்றும் குடும்பநல அறுவை சிகிச்சையில் சிறப்பாக பணியாற்றிய மருத்துவக்கல்லூரி முதல்வர்கள், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்களுக்கு விருதுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.சண்முக்கனி, குடும்பலத்துறை இயக்குநர் மரு.ஹரிசுந்தரி, சென்னை அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், எழும்பூர் மகப்பேறு அரசு மருத்துவமனை இயக்குநர் மரு.கலைவாணி, காசநோய் பிரிவு கூடுதல் இயக்குநர் மரு.அமுதா, மருத்துவ பேராசிரியர்கள் மற்றும் உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர்அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அருகில் மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விஸ்வநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### சேலத்தில் நடைபெறும் இளைஞரணி 2-வது மாநில மாநாட்டில்

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் இருந்து இளைஞர் அணியினர் 10 ஆயிரம் பேர் பங்கேற்பு!

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகக் கூட்டத் தீர்மானம்! அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

காஞ்சிபுரம், நவ. 21 -

சேலத்தில் வருகிற டிசம்பர் 17-ஆம் தேதி அன்று நடைபெறும் இளைஞரணி 2-வது மாநில மாநாட்டில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் இருந்து 10,000-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அணி திரண்டு பங்கேற்பது என குரோம்பேட்டையில் நடைபெற்ற மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் குரோம்பேட்டை, ஜி.எஸ்.டி.சாலையில் அமைந்துள்ள ஆனந்தா திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர்கள் இரா.நரேந்திரன், உமாகாந்த், எஸ்.ஏ.ரமேஷ், ஷேக் அப்துல்லா, கே.எஸ்.எம்.நாதன், பரிதி இளம் சுருதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன், ஆதிமாறன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ்,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், வே.கருணாநிதி, ஜோசப் அண்ணாதுரை, ஏ.கே. கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ், மாடம்பாக்கம் நடராஜன், பெருங்களத்தூர் சேகர்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், வி.எஸ்.ஆராமுதன், ஏ.வந்தேமாதரம், மூவரசம்பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தானம், நகரச் செயலாளர்கள் எஸ்.நரேந்திரன், ஜெ.சண்முகம், டி.பாபு, எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர்.சதீஷ்குமார்,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், க.தேவேந்திரன், மூவரசம்பட்டு சதீஷ், ஆர்.எஸ்.சங்கர், எம்.செல்வகுமார், ம.கணேஷ்பாபு, இரா.பாஸ்கரன், மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், வீ.விஜயகுமார், ப.இராமமூர்த்தி, டி.கே.கமலகண்ணன், கே.மணிகண்டன், கோ.ஜானகிராமன், எல்.பிரபு, என்.கனகராஜ், பா.ஞானப்பிரகாசம், ஜெயராம் மார்த்தாண்டன், தி.க.பாஸ்கரன், எஸ்.ஆல்பர்ட், ஆர்.கோவிந்தன், வி.ரவிச்சந்திரன், ஜா.செந்தில்தேவராஜ், த.வினோத்குமார், டி.பி.செந்தில்குமார், ஜி.தாம்பரம் நாராயணன், ஆர்.கே.சையத்யூசூப், பொன்.ரமேஷ்கவி, டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், ஜான் தினகரன், உதயா கருணாகரன், சசிகலா, கே.ஆர்.ஆனந்தன், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு,

தாம்பரம் மாநகரக் கழக நிர்வாகிகள் அனகை நரேஷ் கண்ணா, சேலையூர் சதாசிவம், செம்பாக்கம் கண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் கூட்ட தீர்மானங்களை விளக்கி மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

இந்திய விடுதலை போராட்டத்தில் கலந்து கொண்டு 8 ஆண்டு காலம் சிறை சென்ற விடுதலைப் போராட்ட தியாகி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களோடு நெருங்கிப் பழகிய பண்பாளர், நம்முடைய தமிழ்நாடு முதல்வர் தலைவர் தளபதி அவர்களால் சங்கரய்யா அவர்களின் அரும்பெரும் பணிகளை பாராட்டி “தகைசால் தமிழர்” விருது பெற்ற 102 வயது நிரம்பிய முதுபெரும் தலைவர் தோழர் சங்கரய்யா அவர்களின் மறைவுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

நூறாண்டு கண்ட திராவிட இயக்கத்தின் தலைவர்களான தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா,- முத்தமிழ் அறிஞர் கலைஞர், - அன்புத் தலைவர் தளபதி ஆகியோரைத் தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 45-வது பிறந்த நாளை காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதும் கழகத்தினரும், இளைஞர் அணி - மாணவர் அணியினரும் நவம்பர் 27-ஆம் தேதி முதல் டிசம்பர் 27-ஆம் தேதி வரை, நம்முடைய மாவட்டத்தில் உள்ள 40-க்கும் மேற்பட்ட ஆதரவற்றோர் இல்லங்களில் உள்ள ஆதரவற்றோர்களுக்கு உணவு - உடைகளை வழங்கும் நிகழ்ச்சி, மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி, ஏழை - எளிய மக்கள் பயன்பெறும் வகையில் மருத்துவ முகாம் - இரத்த தான முகாம், கண் சிகிச்சை முகாம்களை நடத்தும் நிகழ்ச்சி, இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், மாரத்தான் ஓட்டம், கிரிக்கெட், இறகு பந்து, கால் பந்து, கைப் பந்து, சிறகு பந்து, கபடி உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகளை நடத்தி பரிசுகளை வழங்கும் நிகழ்ச்சி மற்றும் ஏழை எளியவர்களுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் மிகவும் கோலாகலமான முறையில் எழுச்சியுடன் நடத்திடுவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக முடிவெடுக்கிறது.

வருகிற டிசம்பர் மாதம், 17-ஆம் தேதி, சேலத்தில் கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறும் கழக இளைஞரணி 2-வது மாநில மாநாட்டில், நமது காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் - வார்டு - கிளைக் கழக இளைஞர் அணி, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் 10,000-க்கும் மேற்பட்ட இளைஞர் அணியினர் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு இம்மாநாட்டை பிரமாண்டமான மாநாடாக வெற்றியடைய செய்ய வேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

வருகிற டிசம்பர் 17-ஆம் தேதி, சேலத்தில் நடைபெறும் கழக இளைஞரணி 2-வது மாநில மாநாட்டினையொட்டி, நம்முடைய கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் தென்குமரி முனையான 133 அடி திருவள்ளுவர் சிலை முன்பு தொடங்கி வைக்கப்பட்ட இரு சக்கர வாகன பிரச்சாரப் பேரணி நம்முடைய மாவட்டத்தில் உள்ள திருப்பெரும்புதூர் தொகுதியில் நவம்பர் 24-ஆம் தேதியும், செங்கல்பட்டு- திருப்போரூர், - தாம்பரம், - பல்லாவரம் ,- ஆலந்தூர் ஆகிய தொகுதிகளில் நவம்பர் 25-ஆம் தேதியும் வருகை தர உள்ளது.

நம்முடைய மாவட்டத்திற்கு வருகை தரும் இளைஞர் அணி இரு சக்கர வாகன பிரச்சாரப் பேரணியை ஆங்காங்கு இளைஞர் அணியினர் திரண்டு நின்று உற்சாகமாக வரவேற்று ஊர்வலமாக அழைத்து செல்வது என்றும், மற்றும் ஒரு தொகுதிக்கு 2 இடங்களில் சேலம் இளைஞர் அணி மாநில மாநாட்டை விளக்கிடும் வகையில் தெருமுனை பிரச்சார கூட்டங்களை நடத்துவது என்றும், இத்தெருமுனை பிரச்சாரம் நடைபெறும் இடத்தை மாவட்ட கழகம் அறிவிக்கும் எனவும், அப்பிரச்சார தெருமுனைக் கூட்டத்தில் கழகத்தினரும் - இளைஞர் அணியினரும் பெரும் கூட்டமாக திரண்டு பங்கேற்பது என்றும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கிய ஆலந்தூர், திருப்பெரும்புதூர், பல்லாவரம், தாம்பரம், செங்கல்பட்டு, திருப்போரூர் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளிலும் உள்ள ஒவ்வொரு வாக்குச் சாவடிகளிலும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள்- BLA-2, மற்றும் 100 வாக்காளர்களுக்கு ஒரு தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் என நியமனம் செய்யப்பட்ட BLC ஆகியோர் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 100 வாக்காளர்களை கழக நிர்வாகிகள் துணையுடன் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியலை சரிபார்த்து மாவட்ட கழகம் அச்சிட்டு தந்துள்ள 2 படிவங்களில் வாக்காளர் பற்றிய முழு கணக்கெடுப்பு செய்யும் இன்றியமையா பணியில் ஈடுபடுவது என்றும், அந்தந்த வாக்குச்சாவடிகளுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ள தகவல் தொழில் நுட்ப அணி தேர்தல் பணிக்குழு உறுப்பினர் உடனிருந்து இக்கணக்கெடுக்கும் பணிக்கு உதவிட வேண்டும் என்றும், இந்த 2 படிவங்களையும் அடித்தல்-திருத்தம் இல்லாமல் பூர்த்தி செய்து வருகிற டிசம்பர் 10-ஆம் தேதிக்குள் மாவட்ட கழகத்திடம் வழங்கிட வேண்டும் என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஏகமனதாகதீர்மானிக்கிறது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.



பல்லாவரம் தொகுதி குரோம்பேட்டை ஜமீன் ராயப்பேட்டை பகுதியில் காலி மனையில் தேங்கி நிற்கும் மழை நீரை மோட்டர்கள் மூலம் வெளியேற்றுவது பொத்தேரியில் உள்ள ஆகாயத்தாமரை செடிகளை அப்புறப்படுத்தி சுத்தம் செய்தல், கழிவுநீர் ஏரியில் கலப்பதை தடுப்பது குறித்த பணிகள் குறித்து பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி மாநகராட்சி அதிகாரிகளுடன் சென்று ஆய்வு செய்தார்.

### பள்ளி - கல்லூரி - பல்கலை உள்ள பகுதிகளில் - புகையிலை, குட்கா விற்பனை உள்ளதா என

# உணவுப் பாதுகாப்புத் துறை - காவல்துறை இணைந்து ஆய்வு!

## மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, நவ.21-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்கள் உள்ள பகுதிகளில் தடைசெய்யப்பட்ட புகையிலை மற்றும் குட்கா பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறதா என்று கண்டறிய உணவு பாதுகாப்புத்துறை - காவல் துறை இணைந்து ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

வாரம்தோறும், உணவு பாதுகாப்புத்துறை மேற்கொள்ளும் ஆய்வுப் பணிகள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, அரசு முதன்மைச் செயலாளரால் கண்காணிக்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு, உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம்2006 -ன் படி, கடந்த 23.05.2013 முதல் புகையிலை மற்றும் நிகோடினை சேர்மமாக கொண்ட உணவுப் பொருட்கள் மீதான தடையை அமுல்படுத்தியது. இதனை வருடந்தோறும் நீட்டித்து வருகிறது. அதனடிப்படையில் 23.05.2023 முதல் இத்தடையாணையை ஓராண்டு நீட்டித்து உணவு பாதுகாப்புத் துறை ஆணையர் அவர்களால் உத்திரவிட்டுள்ளது. உணவு பாதுகாப்புத் துறையின் மூலம் புகையிலை மற்றும் நிகோடினை சேர்மமாக கொண்ட உணவு பொருட்களை தயாரித்தல், சேமித்து வைத்தல், விநியோகித்தல், வாகனங்களில் எடுத்து செல்லுதல், விற்பனை செய்தல் போன்ற செயல்களில் ஈடுபடும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக முதலமைச்சர் அவர்களால், தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் குட்கா உள்ளிட்ட பொருட்கள் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் சுற்றியுள்ள பகுதிகளில் விற்பனை செய்வதை குறித்த தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் வகையில் உணவு பாதுகாப்பு துறையினர் காவல் துறையுடன் இணைந்து ஆய்வு மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், சென்னை மாநகராட்சி பகுதிகளில் நியமன அலுவலர், உணவு பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் காவல் துறை அலுவலர்களைக் கொண்டு 19 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இது போன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து மாநகராட்சிகள், மாவட்ட அளவில் நியமன அலுவலர் மற்றும் நகராட்சிகள், வட்டார அளவில் பணிபுரியும் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் காவல் துறையினருடன் இணைந்து தமிழ்நாடு முழுவதும் 247 குழுக்கள் அமைக்கப்பட்டு தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் குட்கா உள்ளிட்ட பொருட்கள் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் சுற்றியுள்ள பகுதிகளில் விற்பனை செய்யப்படுவது குறித்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது. இதன்படி, பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களைச் சுற்றியுள்ள உணவு வணிக நிறுவனங்கள், கடைகள், வாகனங்கள் ஆகியவற்றில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

ஒரு வாரத்திற்கு 3 நாட்கள் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் குட்கா உள்ளிட்ட பொருட்கள் கண்டறியப்பட்டால் பறிமுதல் செய்து அபராதம் விதிக்கப்படும்.

ஒரு முறைக்கு மேல் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் குட்கா உள்ளிட்ட பொருட்களை விற்பனை செய்யும் குற்றச் செயலில் ஈடுபடும் உணவு வணிகர்களின் உரிமம்/ பதிவுச் சான்றினை உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் 2006 மற்றும் ஒழுங்குமுறைகள் 2011-ன்படி இரத்து செய்யப்படும். இதன் தொடர்ச்சியாக அவசர தடையாணை உத்திரவினைப் பெற்று தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் குட்கா உள்ளிட்ட பொருட்களை விற்பனை செய்த கடையினை பூட்டி சீல் வைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் குட்கா உள்ளிட்ட பொருட்களை விற்பனை செய்தவர்களின் குற்ற வழக்கு விபரத்தினை காவல் துறையினர், உணவு பாதுகாப்பு துறையினருக்கு வழங்க வேண்டும். அதனடிப்படையில், மீண்டும், மீண்டும் இக்குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், கடந்த 29.10.2023 முதல் உணவு பாதுகாப்பு துறையினர் காவல் துறையுடன் இணைந்து தமிழ்நாடு முழுவதும் 3,211 கடைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் 173 கடைகளில் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் குட்கா உள்ளிட்ட பொருட்கள் கண்டறியப்பட்டு 428 கிலோ பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதன் தோராய மதிப்பு ரூபாய். 4,25,965 ஆகும். கடந்த 12 நாட்களில் மட்டும் 88 கடைகளின் உரிமம்/ பதிவுச் சான்று இரத்து செய்யப்பட்டு பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. மேலும், 108 சிறு குற்றச் செயல்கள் கண்டறியப்பட்டு ரூபாய். 5,63,000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களில் மட்டும் 3,51,186 கடைகளில் ஆய்வு செய்யப்பட்டு 12,240 கடைகளில் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் குட்கா உள்ளிட்ட பொருட்கள் கண்டறியப்பட்டு 91,959 கிலோ பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதன் தோராய மதிப்பு ரூபாய். 6,16,43,395 ஆகும். 345 கடைகளின் உரிமம்/ பதிவுச் சான்று இரத்து பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது செய்யப்பட்டுள்ளது. 261 கடைகள் அவசர தடையாணை உத்திரவு மூலம் பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது.

மேலும், 6,568 சிறு குற்ற செயல்கள் கண்டறியப்பட்டு ரூபாய். 3,56,10,000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இதில் Cool Lip என்னும் புகையிலை மட்டும் 3,707 கிலோ பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் குட்கா உள்ளிட்ட பொருட்கள் விற்பனை செய்யப்படுவது குறித்த புகார்களை TN Food Safety Consumer App வாயிலாகவும் 9444042322 என்னும் எண்ணிற்கு வாட்ஸ்அப் வாயிலாகவும் பதிவு செய்யலாம். அதனடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

### எழும்பூர் தொகுதி – சேத்துப்பட்டு

# மங்களபுரம் கிளை நூலகத்திற்கு நூல்கள்!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, நவ.21-

எழும்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், தனக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட நூல்களுள் 147 நூல்களைப் பொதுமக்களின் பயன்பாட்டுக்காக, எழும்பூர் தொகுதி, வார்டு எண்.108, சேத்துப்பட்டு, மங்களபுரத்தில் அமைந்துள்ள கிளை நூலகத்திற்கு இரண்டாவது முறையாக வழங்கினார்.

ஏற்கெனவே முதல் தவணையில் இந்நூலகத்திற்கு 120 நூல்களை அவர் வழங்கியிருக்கிறார். இவ்விரண்டு தவணைகள் மூலமாக இதுவரை 267 நூல்களை இந்நூலகத்திற்கு அவர் வழங்கியிருக்கிறார்.

எழும்பூர் தொகுதி, வார்டு எண்.58, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சுதா ஹோட்டலுக்கு அருகே அமைந்துள்ள பொன்னியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த பொதுமக்கள் தமது தெருவில் குடிநீர் கைபம்ப் அமைக்க வேண்டும் எனக் கோரிக்கை வைத்திருந்தனர். சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் இக்கோரிக்கையை ஏற்று பெருநகரக் குடிநீர் வழங்கல் வாரியத்தின் மூலம் அத்தெருவில் கைபம்ப் அமைத்திட நடவடிக்கை எடுத்து, அதன்படி அமைக்கப்பட்ட கைபம்பினைப் பொதுமக்களின் பயன்பாட்டுக்குத் திறந்து வைத்தார். சென்னைப் பெருநகர மாநகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் வாரிய அதிகாரிகள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

மேலும், இவ்விரண்டு நிகழ்வுகளிலும் முன்னாள் எழும்பூர் தெற்குப் பகுதி செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் பகுதிப் பொருளாளர் ந.கலையரசன், பகுதிப் பிரதிநிதி இளஞ்செழியன், முன்னாள் வட்டச் செயலாளர்கள் வெ.மருதன், புருஷோத்தமன், மாவட்டப் பிரதிநிதிகள் கமலக்கண்ணன், காந்தி, முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், 108 வது வட்டத் துணைச் செயலாளர் சீனிவாசன், எழும்பூர் ரமேஷ், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் சிலம்பரசன், வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சதிஷ்குமார், எழும்பூர் தெற்குப் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் மதுரை மீனாட்சி, புஷ்பராஜ், விஜய தேவராஜ், பாலாஜி அன்புமணி, ஜெயசீலன், பழனி, வேலு, தாஸ், கவிதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் ஒன்றிய நகர பகுதி பேரூர் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் திருநின்றவூரில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் ஏற்பாட்டில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ சிறப்புரையற்றினார். உடன் மாநில ஆதிதிராவிட நல குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்எல்ஏ, மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் ப.அப்துக் மாலிக், பிரபுகஜேந்திரன் மற்றும் கே.ஜெ.ரமேஷ், தொகுதி மேற்பார்வையாளர்கள் ஆர்.டி.இ.ஆதிசேசன், பழ.கணேசன், ம.இராஜி, வி.ஜி.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், ஜி.விமல்வர்ஷன், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், தி.வை.ரவி. டி.தேசிங்கு, ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, தங்கம் முரளி, அக்னி மா.செ.ராஜேஷ், தெ.பிரியாகுமார், வட்ட செயலாளர் கருணாநிதி, கவுன்சிலர் எஸ்.கமலக்கண்ணன், மற்றும் எஸ்.சுதர்சனம், எஸ்.கார்த்தி உள்பட பலர் உள்ளனர்


கலைஞர் 100
1924 - 2023
கன்னியாகுமரி மாவட்ட கடற்கரை கிராமங்கள்
மற்றும் உள்நாட்டு மீனவர்கள்
இணைந்து நடத்தும்
உலக மீனவர் நாள் விழா
தலைமை: மேதகு ஆயர். நசரேன் சூசை ,கோட்டாறு மறைமாவட்டம்
சிறப்பு விருந்தினர்கள்
திமுக துணைப் பொதுச் செயலாளர்
கனிமொழி கருணாநிதி M.P அவர்கள்
மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர்
அனிதா R.இராதா கிருஷ்ணன் அவர்கள்
மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்
த.மனோ தங்கராஜ் அவர்கள்
விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர்
திரு. தொல். திருமாவளவன் அவர்கள்
கன்னியாகுமரி நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. விஜய் வசந்த் அவர்கள்
தலைவர், மனிதநேய மக்கள் கட்சி
திரு. ஜவாஹிருல்லா அவர்கள்
வணக்கத்திற்குரிய மேயர்
குமரி கிழக்கு மாவட்ட திமுக செயலாளர்
திரு. ரெ.மகேஷ் அவர்கள்
மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர்கள்
உயர்திரு. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்
மற்றும் மீனவ சமூகத்தின் மதிப்பிற்குரிய ஆளுமைகள்,
அனைவரையும் வருக! வருக!! என வரவேற்கிறேன்!
இடம்: இனையம் புத்தன்துறை
நாள்: 21.11.2023, மாலை 04:30 மணி
வரவேற்பின் மகிழ்வில்
அ.ஜோசப் ஸ்டாலின்
மீனவர் அணி செயலாளர்
திமுக மீனவர் அணி
தி.மு.க
மீனவர் அணி


நாள் : 21 – 11 – 2023,
செவ்வாய்க்கிழமை
இடம் :
பொம்மைக்குட்டை மேடு,
நாமக்கல்
நாமக்கல்
கிழக்கு – மேற்கு
மாவட்ட தி.மு.க.
இளைஞர் அணி
செயல்வீரர்கள்
கூட்டத்திற்கு
வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் (ம)
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
இளந்தலைவர்
உதயநிதி
ஸ்டாலின்
அவர்களை வருக.. வருக... என
அன்புடன் வரவேற்கிறோம்...
மறைந்த இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்
இரா.அருணகிரி
நினைவுத் திடல்
மறைந்த இளைஞர் அணி மாவட்ட துணைஅமைப்பாளர்
K.உதயகுமார்
மறைந்த வெண்ணந்தூர் ஒன்றிய
இளைஞர் அணி துணை அமைப்பாளர்
A.சுந்தரம் ஆகியோர்
நினைவு நுழைவு வாயில்
மறைந்த நாமக்கல் ஒன்றிய
இளைஞர் அணி துணை அமைப்பாளர்
S.கண்ணன்
மறைந்த நாமகிரிப்பேட்டை பேரூர்
இளைஞர் அணி துணை அமைப்பாளர்
S.மோதில்ராஜ்
மறைந்த காளப்பநாயக்கன்பட்டி பேரூர்
இளைஞர் அணி துணை அமைப்பாளர்
R.மணிவேல் ஆகியோர்
நினைவு மேடை
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின்
அவர்கள் முயற்சியில் நாமக்கல் மாவட்டம் பெற்ற சிறப்பு திட்டங்கள் சில...
நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், வெண்ணந்தூர்
ஊராட்சி ஒன்றியம், போதமலைக்கு 32 கி.மீ சாலை அமைக்க
ரூ.140 கோடி
மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்து பணி
துவங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.
நாமக்கல் மக்களின் நீண்டநாள் கோரிக்கையான நாமக்கல் புறவழிச்சாலை
மற்றும் புதிய பேருந்து நிலையத்திற்கு அணுகுசாலை அமைப்பதற்கு
ரூ.190 கோடி
மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்து பணி
துவங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.
அன்புடன்
வரவேற்று மகிழும்...
கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் B.Com., D.C.M., M.P.
மாவட்டக் கழகச் செயலாளர் / பாராளுமன்ற உறுப்பினர் (மாநிலங்களவை)
Dr. மா.மதிவேந்தன்
வனத்துறை அமைச்சர்
கழக ஆதிதிராவிடர் நலக்குழு துணைத் தலைவர்
K.பொன்னுசாமி M.L.A.
மாவட்ட துணைச் செயலாளர் / சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதி
P.ராமலிங்கம் M.L.A.
நாமக்கல் சட்டமன்றத் தொகுதி
சி.ஆனந்தகுமார்
கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்
நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க.


கலைஞர்
100
1924 - 2023
21.11.2023
2500 கழகம் காத்த மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கவும்,
இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்கவும்
ஈரோடு மாவட்டத்திற்கு வருகை தரும்
கழக இளைஞர் அணி செயலாளர்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை
வருக! வருக! என அன்புடன் வரவேற்கும்...
ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க.


கருப்பு சிவப்பு படைவீரன்!
களத்தில் வெல்லும் கடமை வீரன்!
( 21 - 11 - 2023 ) இன்று
நாமக்கல் கிழக்கு - மேற்கு
மாவட்டக் கழக இளைஞர் அணி
செயல்வீரர்கள் கூட்டத்தில்
பங்கேற்க வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் (ம)
விளையாட்டு மேம்பாட்டுத்துறை
அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக.. வெல்க!
மாண்புமிகு Dr. மா.மதிவேந்தன்
வனத்துறை அமைச்சர் / கழக ஆதிதிராவிடர் நலக்குழு துணைத் தலைவர்
வரவேற்று மகிழும்... S.M.மதுரா செந்தில் மாவட்டக் கழகச் செயலாளர்
நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க.





நாள் : 21.11.2023
செவ்வாய்க்கிழமை
மாலை 4 மணி
இடம் : பொம்மைகுட்டை மேடு,
நாமக்கல் மாவட்டம்

**நாமக்கல் மாவட்ட இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் சிறப்புரையாற்ற வருகை தரும்**

கழக இளைஞரணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்




அவர்களே
வருக. வருக..

**S.M.மதுரா செந்தில் BA.,**
நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளர்

**Dr. மா.மதிவேந்தன்**
மாண்புமிகு வனத்துறை அமைச்சர்

**R.பாலாஜி**
மாவட்ட அமைப்பாளர்

**D.சுந்தர் - S.கதிரவன் - G.ஜெகதீஸ்குமார் - C.கார்த்திகேயன் - க.முரளி**
மாவட்ட துணை அமைப்பாளர்கள்

*பாசமுடன் வரவேற்கும்*

**பா.நவலடி ராஜா MCA., LLB.,**
மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்

**நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (20.11.2023) தலைமைச் செயலகத்தில், நவம்பர் 5 அன்று புதுதில்லி பிரகதி மைதானத்தில் நடைபெற்ற உலக உணவுத் திருவிழா நிகழ்ச்சியில், பிரதான் மந்திரி உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களுக்கான முறைப்படுத்தும் திட்டத்தில் சிறந்த செயல் திறனுக்காக இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட விருதினை, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆகியோர் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



கோயம்புத்தூர் இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியில் நேற்று (20.11.2023) நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் ”இதழாளர் கலைஞர் சிறப்பிதழை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் / இதழாளர் கலைஞர் நூற்றாண்டு விழாக்குழுத் தலைவர் மு.பெ.சாமிநாதன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் / இதழாளர் கலைஞர் நூற்றாண்டு விழாக் குழு இணைத் தலைவர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், பால்வளத்துறை அமைச்சர் / இதழாளர் கலைஞர் நூற்றாண்டு விழாக்குழு இணைத் தலைவர் த.மனோதங்கராஜ், ஆகியோர் முன்னிலையில், கவிப்பேரரசு வைரமுத்து தலைமையில் கே.ஜி மருத்துவமனை நண்பர் பத்தல். டாக்டர்.ஜி.பக்தவத்சலம் வெளியிட, இந்துஸ்தான் கல்வி நிறுவனங்கள் செயலர் திருமதி.சரசுவதி கண்ணையன் பெற்றுக்கொண்டார். அருகில் செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் / இதழாளர் கலைஞர் நூற்றாண்டு விழாக் குழு உறுப்பினர் செயலர் த.மோகன், மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்திகுமார் பாடி, மாநகராட்சி மேயர் திருமதி கல்பனா ஆனந்தகுமார், இதழாளர் கலைஞர் குழுவின் உறுப்பினர்கள் நக்கீரன் கோபால், கி.பாபு ஜெயகுமார் (டெக்கான் க்ரானிக்கல் நாளிதழ்), அருண் ராம் (டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழ்), கோவி லெனின் (பத்திரிக்கையாளர்). மாநகராட்சி துணைமேயர் இரா.வெற்றிச்செல்வன், புலவர் செந்தலை ந.கவுதமன், திருமதி.பர்வீன் சுல்தானா, கவிஞர்.கவிதாசன் ஆகியோர் உள்ளனர்.

### நெய்வேலி நிலக்கரி நிறுவனம் நில எடுப்பு : பாதிக்கப்பட்ட 3543 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட மாற்று இடங்களுக்கு பட்டா!

# 62 ஆண்டு கால கோரிக்கைக்கு தீர்வு கண்ட முதலமைச்சருக்கு நன்றி!

## பயனாளிகள் நெகிழ்ச்சி – பேட்டி!

**சென்னை, நவ.21-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசால் மேற்கொள்ளப்பட்ட துரித நடவடிக்கையால் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்காக நிலஎடுப்பு செய்ததால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட மாற்று இடங்களுக்கு நிலவரித்தி ட்டப் பணி மேற் கொண்டு அம்மக்களின் 60 ஆண்டு கால கோரிக்கைக்கு தீர்வு காணப்பட்டு 3543 பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டன! அதனையொட்டி பயனாளிகள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டனர்.**

அதன் விபரம் வருமாறு :

நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி சுரங்கம் அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்ட போது அந்த நில எடுப்பினால் பாதிக்கப்பட்ட மக்கள்

1959ஆம் ஆண்டு விருத்தாசலம் வட்டம், விஜயமாநகரம் மற்றும் புதுக்கூரை ப்பே ட்டை கிராமங்களில் குடியமர்த்தப்ப ட்டனர். இவ்வாறு மறுகுடியமர்த்தப்பட்ட கிராம நிலங்களில் நில வரித்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படாமல் இருந்து வந்தது.

மறுகுடியமர்வு செய்யப்பட்ட சுமார் 3,000 குடும்பங்கள் பயனடையும் வகையில் வருவாய் நிலவரித்திட்டப் பணிகள் மேற்கொள்ள இவ்வரசால் 26.05.2022 அன்று அரசாணை வெளியிடப்பட்டது. இதற்கென, விருத்தாச்சலம் வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் நிலவரித் திட்ட அலகு ஏற்படுத்தப்பட்டு நிலவரித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இப்பணிகள் துரிதமாக முடிக்கப்பட்டன.

அதன்படி, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்காக நிலஎடுப்பு செய்யப்பட்டதால் பாதிக்கப்பட்ட மக்களின் 60 ஆண்டுகால கோரிக்கைக்கு தீர்வு காணும் வகையில், மாற்று இடங்களுக்கு நிலவரித்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு விஜயமாநகரம் கிராமத்தில் 2676 நபர்களுக்கு 1371 பட்டா க்களும், புதுக்கூரைப்பேட்டை கிராமத்தில் 867 நபர்களுக்கு 475 பட்டாக்களும், என மொத்தம் 3,543 பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கிடும் அடை யாளமாக, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் நேற்று (20.11.2023) தலைமைச் செயலகத்தில் 7 பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசால் மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கையால் பட்டாக்களை பெற்று பயனடைந்த பயனாளிகளான கடலூர் மாவட்ட த்தைச் சேர்ந்த வெங்கடாசலபதி என்பவர், கடலூர் மாவட்டம், கூரைப்பேட்டை என்ற கிராமத்தில் நாங்கள் வசித்து வந்தோம். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் தொடங்குவதற்காக. எங்களது நிலம், வீடு, மனை அனைத்தையும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், நிலக்கரி வெட்டுவதற்காக இடத்தை எடுத்துக் கொண்டு எங்களுக்கு மாற்று இடமாக புதுக்கூ ரைப் பேட்டை கிராமத்தில் நிலம் வழங்கப்பட்டது.

சுமார் 60 ஆண்டுகளுக்கும்மேலாக எங்களுக்கு அந்த நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தால் வழங்கப்பட்ட நிலத்திற்கு பட்டா, சிட்டா ஏதுவும் வழங்கப்படவில்லை. அந்த தரிசு நிலங்களை வைத்து நாங்கள் வங்கி மற்றும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக, எங்களால் எந்த ஒரு கடனையும் பெற்று பயனடைய முடியாத நிலையில் இருந்தோம். புதுக்கூரை ப் பேட்டை மற்றும் விஜயமாநகர கிராமங்களுக்கு பட்டாக்கள் வழங்கப்படவில்லை.

முதலமைச்சர் அவர்களால், எங்களது புதுக்கூரைப் பேட்டை மற்றும் விஜயமாநகர கிராமங்களுக்கு பட்டா வழங்கிட துரித நடவடிக்கை மேற்கொள்ள ப்பட்டு, முதலமைச்சர் அவர்களின் கரங்களால் பட்டாக்கள் வழங்கப்பட்டது.

எங்களது கிராமத்தின் சார்பாகவும், என் சார்பாகவும் முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

மற்றொரு பயனாளியான பாலகிருஷ்ணன், “1957ல் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்கான எனது நிலம் கையகப்படுத்தப்பட்டு, விஜயமாநகரம் கிராமத்தில் குடியமர்த்தப்பட்டேன். இந்நிலத்தை வைத்து தேசிய வங்கியின் மூலமாக எந்த ஒரு கடனும் பெற முடியாத சூழ்நிலையில் இருந்தோம். அதனால், இதுவரை கஷ்டப்பட்டு வந்தோம். நாங்கள், நெல், கம்பு, கரும்பு போன்றவற்றை பயிரிட்டு விவசாயம் செய்து வருகின்றோம். முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், எங்களுக்கு பட்டா வழங்கியதற்காக எனது மனமார்ந்த நன்றியை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்” என்று தெரிவித்தார்.

பட்டா பெற்ற என்.சிவக்குமார், “1951ல் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், முதல் சுரங்கம் வெட்டும் பணிக்காக எங்களுக்கு சொந்தமான நிலத்தை அந்நிறுவனம் எடுத்துக் கொண்டது. எனக்கு புதுக்கூரைப்பேட்டை கிராமத்தில் இடம் தரப்பட்டது. 65 ஆண்டுகாலமாக எங்களது நிலத்திற்கு பட்டா வழங்கவில்லை. பட்டா வழங்குமாறு கோரி கிராமத்தின் சார்பாக கோரிக்கை மனு அளித்திருந்தோம். அதன்படி, 2021ஆம் ஆண்டு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, எங்களது கோரிக்கைகளை பரிசீலனை செய்து தற்போது எங்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது கிராம மக்களின் சார்பில் நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று தெரிவித்தார்.

பயனாளி அண்ணாதுரை, “என்.எல்.சி. நிறுவனம் 1958ல் நிலம் எடுத்துக்கொண்டு, எங்களுக்கு புதுக்கூரைப்பேட்டையில் நிலம் கொடுத்தார்கள். நாங்கள் எங்களுக்கு வழங்கப்பட்ட அந்த நிலத்திற்கு பட்டா இல்லை என்று சொல்லி முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை வைத்தோம். அந்த கோரிக்கையை பரிசீலனை செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்டா வழங்கினார். பட்டா வழங்கியதற்கு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று தெரிவித்தார்.

60 ஆண்டு கால கோரிக்கைக்குத் தீர்வு கண்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு, மக்களுக்கான அரசு என்பதை இதன்மூலம் மீண்டும் ஒரு முறை மெய்ப்பித்துள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ‘சொன்னதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம்’ என்றார். முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ‘சொன்னதை மட்டுமல்ல சொல்லாததையும் செய்வோம்’ என்று குறிப்பிட்டதற்கேற்ப மக்களின் தேவையறிந்து இவ்வரசு செயல்பட்டு வருகிறது.

### பெருமாள் முருகனின் ‘ஆளண்டாப் பட்சி’ நாவலின் ஆங்கில மொழி பெயர்ப்புக்கு உயரிய விருது!

# வாசகப் பரப்பை விரியச் செய்த ஜனனி கண்ணனுக்குப் பாராட்டுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, நவ. 21 -**

**பெருமாள் முருகனின் ‘ஆளண்டாப் பட்சி’ நாவலின் ஆங்கில மொழி பெயர்ப்புக்கு ‘JCB Prize of literature| எனும் உயரிய விருது வழங்கப்பட்டுள்ளதையொட்டி, அதன் மொழி பெயர்ப்பாளரான ஜனனி கண்ணனுக்கு தமது பாராட்டுகளைத் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவிட்டுள்ளார்.**

**அதில் முதல்வர் அவர்கள், “வாசகப் பரப்பை விரியச் செய்த ஜனனி கண்ணனுக்குப் பாராட்டுகள்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

மண்ணோடு இயைந்த மொழி வழக்கைக் கொண்டு எழுதும் பெருமாள் முருகன் அவர்களது ஆளண்டாப்பட்சி நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பான Fire Bird - CB Prize for Literature எனும் உயரிய விருதை வென்றிருப்பது அறிந்து மகிழ்கிறேன்.




பெருமாள்முருகன் அவர்களுக்கும், தேர்ந்த மொழிபெயர்ப்பால் ஆளண்டாப்பட்சியின் வாசகப் பரப்பை விரியச் செய்த ஜனனி கண்ணன் அவர்களுக்கும் பாராட்டுகள்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.






காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியம் பேரூர் தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா இளைஞர் எழுச்சி நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்ட கழக செயலாளர்.க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் க.செல்வம் எம்.பி., ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன், டி.குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.நாகன், பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல், பேரூராட்சி மன்ற தலைவர் பொன் சசிகுமார் மற்றும் ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



தந்தை பெரியார் அவர்களின் சீடராய், பேரறிஞர் அண்ணா அவர்களின் தம்பியாய், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற நண்பராய் விளங்கிய முன்னாள் அமைச்சர், செந்தமிழ்ச் செல்வர் சி.வி.எம்.அண்ணாமலை அவர்களின் 107 வது பிறந்தநாள் காஞ்சிபுரத்திலுள்ள கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., இல்லத்திலும், மாவட்டக் கழக அலுவலகத்திலும், கழக நிர்வாகிகள் முன்னிலையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சன்பிராண்ட் கே.ஆறுமுகம், சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மகாலட்சுமி, பி.எம்.குமார், க.குமணன், பி.எம்.பாபு, கே.திலகர், எஸ்.சந்துரு, அ.தசரதன், சு.வெங்கடேசன், எம்.எஸ்.சுகுமார், செ.சிகாமணி, வி.எஸ்.ராமகிருஷ்ணன், மலர்கொடி குமார், ஆர்.கே. தேவேந்திரன், அ.யுவராஜ், வெங்கட்ராமன், தி.ராம்பிரசாத், எஸ். தமிழ்செல்வன், கே.ஏ.செங்குட்டுவன், ஏ.எஸ்.முத்துச்செல்வன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! செ.தமிழ்வேந்தன் தலைமை!

# திரு.வி.க. நகர் வடக்குப் பகுதியில் - கலைஞர் நூற்றாண்டு விழா!

## கே.பாக்யராஜ் -கரு பழனியப்பன் -குட்டி பத்மினி சிறப்புரை!

சென்னை நவ. 21-

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க நகர் வடக்கு பகுதி கழக சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை யொட்டி கதை, திரைக் கதை, வசனம், கலைஞர் என்றைக்கும் சிகரம்' நிகழ்ச்சி 22-11-2023 புதன் கிழமை மாலை 6 மணியளவில் சென்னை ஓட்டேரி ஹோம்ரா பவனில் நடைபெறுகின்றது.

நிகழ்விற்கு பகுதிக் கழகச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் தலைமை வகிக்கிறார். சரிதாமகேஷ்குமார், பி.உதயசங்கர், பெரம்பூர் ஆர். மகேஷ், தில்லைகதிரவன், பெரம்பூர் ஆர்.ராஜன், புல்லட் ரமேஷ், புவனவதி, கிணார் ஆறுமுகம், எஸ்.புஷ்பராஜ், எம்.ஏ.டீக்கா, எம். இசட்.அபோய், ஜி.கிருஷ்ண குமார், சே.மணிமாறன், வி.ஜெகன் ஆகியோர் வரவேற்கின்றனர்

இந்நிகழ்விற்கு அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலை வகிக்கிறார்.

இதில் நடிகர்.கே.பாக்கியராஜ்,இயக்குனர்.கரு பழனியப்பன், நடிகை.குட்டி பத்மினி ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இந்நிகழ்வில் மேயர் பிரியாராஜன், கலாநிதிவீராசாமி எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ அ.வெற்றிஅழகன். எம்.எல்.ஏ ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ இ.பரந்தாமன். எம்.எல்.ஏ, வழக்கறிஞர். கே.சந்துரு, பி.கே.மூர்த்தி,கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், எம்.சாமிக்கண்ணு, ஐ.சி.எப்.வ.முரளிதரன், வே.வாசு, கூ.பீ. ஜெயின், சொ.வேலு, டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், எ.நாகராசன், வி.சுதாகர், எஸ். முரளி, எஸ்.இராஜசேகர்,கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.மகாதேவன், இசட். ஆசாத், பி.ஜெ.துளசிங்கம், சி.மகேஷ்குமார், டி.லோகேஷ், வானவில்விஜய்,எம்.பெரோஸ்கான், நா.துலுக்காணம், கா.ராஜ்முகமது, துரைகண்ணன், I.FF.மோகன், புரசை தாமோதரன், டாக்டர் ஜி. சாந்தகுமாரி, சுதாதினதயாளன், ராஜேஸ்வரிஸ்ரீதர், ஜி.வி.நாகவள்ளி, பி.விஜயகுமார், எம்.விநாயகம், க. பா.பிரதீப்குமார், ம.அசோக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, புனிதவதி எத்திராசன், மு. சரவணன், ரமணி லோகேஷ், எஸ்.தமிழ்செல்வி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

மா. ருத்ரமூர்த்தி, பரிமளா சுரேஷ் பாபு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.




## சமூக வலைதளங்களில் வலம் வருவது!

அமைச்சர்கள் அனிதா இராதாகிருஷ்ணன் - த.மனோ தங்கராஜ்- மேயர் ரெ.மகேஷ் பங்கேற்பு!

# குமரியில் உலக மீனவர் நாள் விழா! கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை!

## தொல் திருமாவளவன் எம்.பி., விஜய் வசந்த் எம்.பி. - ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. கருத்துரை; அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

குமரி, நவ.21

கன்னியாகுமரி மாவட்ட கடற்கரை கிராமங்கள் மற்றும் உள்நாட்டு மீனவர்கள் இணைந்து நடத்தும் உலக மீனவர் நாள் விழா ஆயர் நசரேன் சூசை தலைமையில் இன்று (21.11.2023) மாலை 4.30 மணிக்கு இனையம் புத்தன்துறையில் நடைபெறுகின்றது.

இதில் கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர்கள் அனிதா ஆர். இராதா கிருஷ்ணன், த. மனோ தங்கராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மேலும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன், கன்னியாகுமரி நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவஹிருல்லா, மேயர் ரெ.மகேஷ் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மீனவ சமூகத்தின் நிர்வாகிகள் பெருமக்கள் கலந்துகொள்கின்றனர்.

நிகழ்ச்சியில் அனைவரும் கலந்துகொள்ளும்படி மீனவர் அணி செயலாளர் அ. ஜோசப் ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

திருவள்ளூர் மத்திய மாவட்டத்திலிருந்து

# இளைஞரணி மாநாட்டில் 3 ஆயிரம் பேர் பங்கேற்பு!

## இளைஞரணிக் கூட்டத்தில் தீர்மானம்! ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ சிறப்புரை!

திருவள்ளூர் நவ.21 -

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் ஒன்றிய நகர பகுதி பேரூர் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் திருநின்றவூரில் நடைபெற்றது. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ் குமார் அனைவரும் வரவேற்றார். நகரக் கழகச் செயலாளர் தி.வை. இரவி மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமாமகேஸ்வரன், அக்னி மா.செ.ராஜேஷ், தெ. பிரியாகுமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ தலைமை வகித்து சிறப்பு ரையற்றினார். தீர்மானத்தை விளக்கி அவர் பேசுகையில், வருகின்ற டிசம்பர் 17ஆம் தேதி அன்று சேலத்தில் நடைபெறும் வரலாற்று சிறப்பு மிக்க இளைஞர் அணி மாநில மாநாட்டிற்கு திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியிலிருந்து 3 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இளைஞர்கள் வெள்ளை சீருடன் அணிந்து பெருந்திரளாக கலந்து கொண்டு நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் .

நவம்பர் 27ஆம் தேதி அன்று கழக இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு இளைஞர் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டம் முழுவதும் உள்ள மாநகர ஒன்றிய நகர பேரூர் கழகங்களில் பட்டி தொட்டி எல்லாம் கழகக் கொடியை ஏற்றி பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி மற்றும் ரத்ததான முகாம் மருத்துவ முகாம் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல் ஏழை எளியவர் களுக்கு நலத்திட்ட உதவி அன்னதான வழங்குதல் மற்றும் திருவள்ளூர் மத்திய மாவட்டம் முழுவதும் மரக்கன்றுகளை நடுதல் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வெகு சிறப்பாக நடத்த வேண்டும் .

கன்னியாகுமரி தொடங்கி வைக்கப்பட்ட பைக் பேரணி வருகின்ற 23.11.2023 அன்று ஆவடி பகுதிக்கு வருகை புரிய உள்ளனர் ஆகையால் சிறப்பான வரவேற்பு அளிக்கபடுகிறது .

வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் இரவும் பகலும் பாராமல் தேர்தலில் பணியாற்றி தலைமை கழகம் அறிவுக்கும் வேட்பாளரைபெருந்திரளாக வாக்கு வித்தியாசம் வெற்றி பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இந் நிகழ்ச்சியில் மாநில ஆதிதிராவிட நல குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்எல்ஏ, மாநில இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ப. அப்துக் மாலிக், பிரபுகஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், தொகுதி மேற்பார்வையாளர்கள் ஆர்.டி.இ.ஆதிசேசன், பழ.கணேசன்,

மாவட்ட கழக நிர்வாகிகள் ம.இராஜி, வி.ஜி.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், பொதுக்குழு உறுப்பினர் கள் ஜி.விமல்வர்ஷன், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், ஒன்றிய நகர கழக செயலாளர்கள் டி.தேசிங்கு, ப.ச. கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, தங்கம் முரளி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் பெ.வினோத், வி.தியா கராஜன், ஆர்.பிரவீன் குமார், மாநகரக் கழக இளைஞரணி அமைப்பாளர் ஜி.துர்கா பிரசாத்,

மற்றும் எஸ்.சுதர் சனம், ஆர்.நந்தகுமார், பட்டானி எஸ்.கார்த்தி, துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் இளைஞரணி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டார்கள் முடிவில் வட்டக் கழக செயலாளர் கருணாநிதி கவுன்சிலர் கமலக்கண்ணன் ஆகியோர் நன்றி கூறினார்கள்.

முன்னாள் அமைச்சர்

# சி.வி.எம். அண்ணாமலை 107வது பிறந்த நாள் நிகழ்ச்சி!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் - சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. முன்னணியினர் பங்கேற்பு!

காஞ்சிபுரம், நவ.21

தந்தை பெரியார் அவர்களின் சீடராய், பேரறிஞர் அண்ணா அவர்களின் தம்பியாய், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற நண்பராய் விளங்கிய முன்னாள் அமைச்சர், செந்தமிழ்ச் செல்வர் சி.வி.எம்.அண்ணாமலை அவர்களின் 107 வது பிறந்தநாள் காஞ்சிபுரத்திலுள்ள கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி. எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., இல்லத்திலும், மாவட்டக் கழக அலுவலகத்திலும், கழக நிர்வாகிகள் முன்னிலையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சன்பிராண்ட் கே.ஆறுமுகம், சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மகாலட்சுமி, பி.எம்.குமார், க.குமணன், பி.எம்.பாபு, கே.திலகர், எஸ்.சந்துரு, அ. தசரதன், சு.வெங்கடேசன், எம்.எஸ்.சுகுமார், செ.சிகாமணி, வி.எஸ்.ராமகிருஷ்ணன், மலர்கொடி குமார், ஆர்.கே. தேவேந்திரன், அ.யுவராஜ், வெங்கட்ராமன், தி.ராம்பிரசாத், எஸ். தமிழ்செல்வன், கே.ஏ.செங்குட்டுவன், ஏ.எஸ்.முத்துச்செல்வன், வ. ஜெகன்நாதன், பி. நிர்மலா, வரதராஜன், பிரகாஷ், எஸ். சேகர், பாலமுருகன், எஸ். மாரிமுத்து, ஆர்.இளஞ்செழியன், பி.என்.ரவி, எஸ்.எஸ். ஆர்.சசிக்குமார், பி.எம்.நீலகண்டன், ஆறுமுகம், பார்த்திபன், வெங்கட்ராமன், அருள்முருகன், ஜெயபால், ஆர்.கே.சசிகுமார், ஜோதி, நந்தா, லோகுதாஸ், உலகநாதன், எல்லப்பன், குமரேசன், ஆர்.வினோத், குடியரசு, நாத்திகம் நாகராசன், சாட்சி சண்முகசுந்தரம், வ.அய்யாவு, கே.கிருபாகரன், கே.வடமலை, கே.அருணாசலம், எம்.எஸ். பாலன், பழனிவேலு, லட்சுமணன், பாலமுருகன், டி. சாகுல்அமீது, க.செல்வம், டி.ஜெய்கணேஷ், எஸ்.செந்தில், எஸ்.சிகாமணி, கே.சண்முகம், க.வரதன், ஏ.எஸ். ரவி, ஜெ.தேவிகா, ஆ. செல்வி, வ.கமலக்கண்ணன், ப.சுரேஷ், எஸ்.கௌதமி உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள், கழக அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சி.வி. எம்.குடும்பத்தினர் என ஏராளமானோர் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து, கழக மாணவரணி செயலாளரும், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினருமான சி.வி.எம்.பி.எழிலரசன் ஏற்பாட்டில், காஞ்சிபுரம் மாநகரின் பல்வேறு இடங்களில் ஏழை, எளியோருக்கு பசி ஆற்றும் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

## தி.மு.க. நெசவாளர் அணி

# சென்னை மண்டல மாவட்ட நிர்வாகிகள் கூட்டம்!

## நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு!

தி.மு.க. நெசவாளர் அணி சென்னை தெற்கு, சென்னை கிழக்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு காஞ்சிபுரம் மாநகரம், தாம்பரம் மாநகரம் ஆகிய மாவட்ட - மாநகர நிர்வாகிகள் கூட்டம் நாளை (22-11-2023 புதன்கிழமை) காலை 10.00 மணி அளவில் சென்னை, தேனாம்பேட்டை, அண்ணாசாலை, அன்பகத்தில் எனது தலைமையில், நெசவாளர் அணி துணைத் தலைவர் பள்ளிப்பட்டு ஒ.எ.நாகலிங்கம் வரவேற்புரையாற்றிட, செயலாளர்கள் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், அருப்புக்கோட்டை க.பழனிசாமி, பரணி கே.மணி, நெல்லை எஸ்.பெருமாள், பொள்ளாச்சி கே.எம்.நாகராஜன், ஈரோடு சிந்து ரவிச்சந்திரன் - துணைச் செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், கோபி மணிமாறன், திருச்சி கோவிந்தசாமி, தேனி ஆ. ராமசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இதில் கழக துணைப் பொதுச்செயலாளர் - அமைச்சர் க.பொன்முடி - கைத்தறி துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி - சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் த. வேலு, எம்.எல்.ஏ., ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

மாநில நெசவாளர் அணிச் செயலாளர் காஞ்சிபுரம் தி.அன்பழகன் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்குகிறார்.

இக்கூட்டத்தில் மாவட்ட - மாநகர நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா;

கழக ஆக்கப் பணிகள் குறித்து.

"அண்ணா அறிவாலயம்"

சென்னை - 18

**நன்னியூர் இராஜேந்திரன்**

தலைவர்

தி.மு.க. நெசவாளர் அணி

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# குன்றத்தூர் தெற்கு ஒன்றிய செயற்குழு - பாகநிலை முகவர்கள் கூட்டம்!

## ஒன்றியக் கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் அறிவிப்பு!

காஞ்சிபுரம், நவ. 21-

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயற்குழு மற்றும் பாக நிலை முகவர்கள் (BLA 2) கூட்டம் இன்று (21.11.2023 - செவ்வாய்க்கிழமை) மாலை 4.30 மணியளவில் படப்பை சி.என்.சி மகாலில் ஒன்றிய கழக அவைத்தலைவர் மு.சுப்ரமணி தலைமையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் - குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் சிறப்புரையாற்றிட திருப்பெரும்புதூர் தொகுதி பார்வையாளர் வே.உமாகாந்த் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் வ.நந்த கோபால், இ.மணி, வாசுகிமகேஷ், சி. பார்த்த சாரதி, வி.அரி, மு. ராஜேந்திரன், மா.பரிமேலழகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அதுபோது இக்கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக்கழக செயலாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேணுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: நவம்பர் 27 கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் .

டிசம்பர் 17 சேலம் தி.மு.க இளைஞர் அணி 2வது மாநில மாநாடு.

BLA 2 வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணி.

கழக வளர்ச்சி.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




சென்னை மாவட்டத்தில் உள்ளடக்கிய 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் 2024 குறித்த ஆலோசனைக் கூட்டம் சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/ கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், முன்னிலையில், சென்னை மாவட்ட வாக்காளர் பட்டியல் பார்வையாளர்/இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆணையாளர் திருமதி மைதிலி கே. ராஜேந்திரன், தலைமையில் நேற்று (20.11.2023) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/வட்டார துணை ஆணையாளர்கள் எம்.பி.அமித் (தெற்கு), கே. ஜெ.பிரவீன் குமார், (மத்தியம்), கட்டா ரவி தேஜா (வடக்கு), மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்கள்), தேர்தல் பதிவு அலுவலர்கள், உதவி தேர்தல் பதிவு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




வேலூர் மாவட்டம் காட்பாடியில் நடந்த கூட்டுறவு வாரவிழாவில் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கழக பொதுச் செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் காசோலை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சியர் குமரவேல் பாண்டியன், மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், கூட்டுறவு இணை பதிவாளர் சற்குண அய்யப்பன், மாநகர தி.மு.க. செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன் மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் எம்.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில் குமார், ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர்கள் காட்பாடி வேல்முருகன், குடியாத்தம் சத்யானந்தம், கே.வி.குப்பம் எல்.ரவிச்சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வீடற்ற ஏழை, எளிய மக்களுக்காக நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில்

# ரூ.453.67 கோடி செலவில் 4272 புதிய குடியிருப்புகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, நவ. 21-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.11.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ரூ.453.67 கோடி செலவில் 9 மாவட்டங்களில் 13 திட்டப்பகுதி களில் கட்டப்பட்டுள்ள 4272 அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்தார். மேலும், பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 4680 பயனாளிகளுக்கு தலா ரூ.2.10 லட்சம் வீதம் ரூ.98.28 கோடி மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான பணி ஆணைகளையும், 72 கைத்தறி நெசவாளர்களுக்கு பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின் கீழ் தலா ரூ. 4 லட்சம் வீதம் ரூ.2.88 கோடி மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான பணி ஆணைகளையும் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 100 மாற்றுத்திறனாளிகளுக்கு குடியிருப்புகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளையும் வழங்கினார்.

தமிழ்நாட்டில் வாழும் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய வீட்டுவசதியினை ஏற்படுத்தி தரும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் தொடங்கப்பட்டது. குடிசைப் பகுதிகளை மேம்படுத்துதல் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் முதன்மையான செயல்பாடாக இருந்தாலும், நகர்ப்புற ஏழைக் குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த வீட்டு வசதி வாய்ப்புகள் மட்டுமே போதுமானதாக இருக்காது, அவர்களுக்கு குடிநீர், சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, மருத்துவ வசதி, திடக்கழிவு மேலாண்மை, பொது வெளியிடம் போன்ற போதுமான நகர்ப்புற வசதிகளுடன் வீட்டுவசதி ஏற்படுத்துவது அவசியம் என்று கருதி முதலமைச்சர் அவர்கள் 1.9.2021 அன்று தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பெயரினை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று பெயர் மாற்றம் செய்து ஆணையிட்டார். குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல, குடிசைகளில் வாழும் மக்களுடைய வாழ்வாதாரத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**மதுரை இராஜாக்கூரில் 512 குடியிருப்புகள்!**

அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் செங்கல்பட்டு மாவட்டம், முருகமங்கலம் திட்டப்பகுதியில் தரை மற்றும் 2 தளங்களுடனும், தரை மற்றும் 5 தளங்களுடனும் 151 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் 1260 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், செம்மஞ்சேரி திட்டப்பகுதியில் தரை மற்றும் 5 தளங்களுடன் 20 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் 144 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்;

மதுரை மாவட்டம், இராஜாக்கூர் திட்டப்பகுதியில் தரை மற்றும் 3 தளங்களுடன் 50 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில் 512 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், ஆத்திக்குளம் திட்டப்பகுதியில் தரை மற்றும் 3 தளங்களுடன் 30 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் 320 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்;

தருமபுரி மாவட்டம், நம்பிப்பட்டி திட்டப்பகுதியில் தரை மற்றும் 2 தளங்களுடன் 42 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் 420 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்;

கன்னியாகுமரி மாவட்டம், புதுக்குளம் திட்டப்பகுதியில் தரை மற்றும் 3 தளங்களுடன் 36 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் 384 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், ஈசாந்திமங்கலம் பகுதி - 2 திட்டப்பகுதியில் தரை மற்றும் 3 தளங்களுடன் 3 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் 32 புதிய அடுக்குமாடி குடியிருப்பு கள்;

**நெல்லையில் 320 புதிய குடியிருப்புகள்!**

திருநெல்வேலி மாவட்டம், ஜெபாகார்டன் திட்டப்பகுதியில் தரை மற்றும் 4 தளங்களுடன் 31 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் 320 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்;

கள்ளக்குறிச்சி மாவட்டம், கீரனூர் பகுதி - 1 திட்டப்பகுதியில் தரை மற்றும் 2 தளங்களுடன் 24 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் 264 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்;

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் பகுதி - 1 திட்டப்பகுதியில் தரை மற்றும் 2 தளங்களுடன் 17 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் 192 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் அன்னவாசல் பகுதி - 2 திட்டப்பகுதியில் தரை மற்றும் 3 தளங்களுடன் 23 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் 216 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்,;

கோயம்புத்தூர் மாவட்டம், வடக்கு பேரூர் பகுதி - 1 திட்டப்பகுதியில் தரை மற்றும் 6 தளங்களுடன் 11 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் 112 புதிய அடுக்குமாடி குடியிருப்பு கள்;

கடலூர் மாவட்டம், பனங்காட்டு காலனி பகுதி - 2 திட்டப்பகுதியில் தரை மற்றும் 3 தளங்களுடன் 9 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் 96 புதிய அடுக்குமாடி குடியிருப்பு கள்;

என மொத்தம் 453 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள 4,272 குடியிருப்புகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பயனாளிகளுக்கு குடியிருப்பு களுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 6 பயனாளிகளுக்கு ஆணைகளை வழங்கினார்.

இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை 2037.08 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 19,777 அடுக்குமாடி குடியிருப்புகள் வீடற்ற ஏழை எளிய மக்களுக்காகவும், குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்காகவும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**நம் குடியிருப்பு நம் பொறுப்பு!**

நேற்றையதினம் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள இப்புதிய குடியிருப்புகள், ஒவ்வொன்றும் சுமார் 400 சதுர அடி பரப்பளவுடன், ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும், அனைத்து குடியிருப்பு வளாகங்களும், சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவு நீரேற்று வசதி, சிறுவர் பூங்கா, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. "நம் குடியிருப்பு, நம் பொறுப்பு" திட்டத்தின் கீழ் அனைத்து திட்டப்பகுதி களிலும் குடியிருப்போர் நலச்சங்கங்கள் உருவாக்கப்பட்டு வருகிறது.

**பணி ஆணைகள் வழங்குதல்!**

பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின் கீழ் பல்வேறு மாவட்டங்களில் வசிக்கும் 4680 பயனாளிகளுக்கு தனி வீடுகள் கட்ட தலா ரூ.2.10 இலட்சம் வீதம் 98 கோடியே 28 இலட்சம் மதிப்பீட்டிலான பணி ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 3 பயனாளிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் ஆணைகள் வழங்கினார்.

**கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள்!**

நகர்ப்புற கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட மானியமாக வழங்கப்படும் தொகை ரூ.4 இலட்சமாக உயர்த்தி வழங்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில் மாநில அரசு மானியமாக ரூ.2.50 இலட்சம் ரூபாயும், ஒன்றிய அரசு மானியமாக ரூ.1.50 இலட்சம் ரூபாயும், மொத்தம் 4 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. இன்றைய தினம் 72 நகர்ப்புற கைத்தறி நெசவாளர்களுக்கு தலா ரூ.4 இலட்சம் வீதம் 2 கோடியே 88 இலட்சம் மதிப்பீட்டிலான பணி ஆணைகள் வழங்கிடும் அடையாளமாக 3 பயனாளிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் பணி ஆணைகளை வழங்கினார்.

**மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கீட்டு ஆணைகள்!**

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 100 மாற்றுத்திறனாளிகளுக்கு குடியிருப்புகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 3 மாற்றுத்திறனாளிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நே.சிற்றரசு தலைமை! நா.சந்திரபாபு முன்னிலை!

# சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் மு.சீனிவாசன் வேண்டுகோள்!

*சென்னை, நவ. 21-*

*சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் மு.சீனி வாசன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-*

*சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணியின் ஆலோசனைக் கூட்டம் இன்று (21.11.2023 - செவ்வாய்க்கிழமை) மாலை 6.30 மணியளவில், நுங்கம்பாக்கம், காம்தார் நகர் முதல் தெருவில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. தலைமையில் இலக்கிய அணி பொருளாளர் டாக்டர் நா.சந்திரபாபு முன்னிலையில் நடைபெற உள்ளது.*

*அவ்வமையம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் சமீபத்தில் அன்பகத்தில் நடைபெற்ற மாநில இலக்கிய அணி நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றியும் ஆலோசிக்க உள்ளதால், சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணியின் அனைத்து நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*




திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் ஒன்றிய நகர பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் மாவட்ட அமைப்பாளர் ம.கிரண் ஏற்பாட்டில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. சேலத்தில் நடைபெறும் மாநாட்டு பணிகள் இளைஞர் அணி செயலாளர் அவர்கள் பிறந்தநாள் விழா பணிகள் நீட் விலக்கு கையொப்பம் இயக்கம் துரிதப்படுத்தல் குறித்து பல்வேறு ஆலோசனை வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன், எம்.பூபதி, பிரபுகஜேந்திரன், அப்துல் மாலிக், மாவட்ட நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதிசேசன், கே.திராவிடபக்தன், மிதுன்சக்கரவர்த்தி, பா.சிட்டிபாபு, வி.கிஷோர், மற்றும்திருத்தணிவி.வினோத்குமார்,ஆர்த்திரவி,கே.என்.கிருஷ்ணன்,சி.என்.சண்முகம்,பெ.பழனி, சி.ஜெ.சீனிவாசன், பிடி.சந்திரன், எம்.ஜி.ஜோதிக்குமார், டி.ஆர்.கே.பாபு, சி.சு.ரவிச்சந்திரன், ஸ். மகாலிங்கம், மோ.ரமேஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.எம்.சுகுமாரன், டி.மோதிலால், ம.புவனேஷ்குமார், ஆர்.திலீபன், உள்பட பலர் உள்ளனர்

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்:

# விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் 46 மாவட்டங்களில் 46 விளையாட்டுப் போட்டிகள்!

## அணியின் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. அறிவிப்பு!





கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தி.மு.க. இளைஞரணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 46வது பிறந்தநாளை முன்னிட்டு தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில் 46 மாவட்டங்களில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகிறது என அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. அறிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

| வ. எண் | நாள் | மாவட்டம் | விளையாட்டு போட்டியின் பெயர் | அமைப்பாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 21.11.2023 செவ்வாய்க்கிழமை | சேலம் கிழக்கு | கைப்பந்துப் போட்டி | த.ரமேஷ் |
| 2 | 24.11.2023 வெள்ளிக்கிழமை | கடலூர் மேற்கு | கபடிப்போட்டி, கால்பந்துபோட்டி | சி.வெ.க. வெங்கடேஷ் |
| 3 | 25.11.2023 சனிக்கிழமை | ஈரோடு தெற்கு | கபடிப் போட்டி | வி.எஸ். சங்கர் |
| 4 | 25.11.2023 சனிக்கிழமை | ஈரோடு வடக்கு | கைப்பந்துப் போட்டி | எஸ்.பி.ரமேஷ் |
| 5 | 25.11.2023 சனிக்கிழமை | நாமக்கல் மேற்கு | கபடிப்போட்டி | த.ரமேஷ் |
| 6 | 25.11. 2023 சனிக்கிழமை | கன்னியாகுமரி மேற்கு | கிரிக்கெட் போட்டி | கே.வி.ஜீடுதேவ் |
| 7 | 25.11.2023 சனிக்கிழமை | திருநெல்வேலி மத்திய | கிரிக்கெட் போட்டி | சு.பலராமன் |
| 8 | 25.11.2023 சனிக்கிழமை | விழுப்புரம் தெற்கு | இறகுப்பந்துப் போட்டி | ஏ.பாலாஜி |
| 9 | 25.11.2023 சனிக்கிழமை | திருப்பத்தூர் | கால்பந்துப் போட்டி | செ.வெங்கடேஷ் |
| 10 | 26.11.2023 ஞாயிற்றுக்கிழமை | திருச்சி தெற்கு | கால்பந்துப் போட்டி | ஆர்.ஜான் சாலமன் |
| 11 | 27.11.2023 திங்கட்கிழமை | புதுக்கோட்டை தெற்கு | கபடிப்போட்டி | கோ.சக்திவேல் |
| 12 | 27.11.2023 திங்கட்கிழமை | திருவாரூர் | நீச்சல் போட்டி | எம்.என்.ராஜா |
| 13 | 27.11. 2023 திங்கட்கிழமை | நாகை | இறகுப்பந்துப் போட்டி | வி.கமல் |
| 14 | 27.11.2023 திங்கட்கிழமை | திருவள்ளூர் மத்திய | கால்பந்துப் போட்டி | வா.பார்த்திபன் |
| 15 | 27.11.2023 திங்கட்கிழமை | காஞ்சிபுரம் தெற்கு | கபடிப் போட்டி | சி.ராதாகிருஷ்ணன் |
| 16 | 27.11.2023 திங்கட்கிழமை | ராணிப்பேட்டை | மகளிர் கால்பந்துப் போட்டி | ப.பிரேம் ஆனந்த் |
| 17 | 02.12.2023 சனிக்கிழமை | திண்டுக்கல் கிழக்கு | கூடைப்பந்து போட்டி | ஆர்.பார்த்தசாரதி |
| 18 | 2.12.2023 சனிக்கிழமை | திருநெல்வேலி கிழக்கு | கைப்பந்துப் போட்டி | தவசி மணிகண்டன் |
| 19 | 02.12.2023 சனிக்கிழமை | பெரம்பலூர் | கைப்பந்துப் போட்டி | வெ.கார்மேகம் |
| 20 | 2.12.2023 சனிக்கிழமை | தேனி தெற்கு | கபடிப்போட்டி, | இரா.வசந்தன் |
| 21 | 02.12.2023 சனிக்கிழமை | திருவள்ளூர் கிழக்கு | கபடிப்போட்டி, | கே.ராஜேஷ் |
| 22 | 02.12.2023 சனிக்கிழமை | சென்னை தெற்கு | இறகுப் பந்துப் போட்டி | வே.ஆனந்தம் |
| 23 | 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை | திருச்சி மத்திய | கபடிப் போட்டி | எஸ்.பிரபாகரன் |
| 24 | 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை | காஞ்சிபுரம் வடக்கு | சிலம்பம் போட்டி | டி.ஆர்.சாரதி |
| 25 | 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை | திருவள்ளூர் மேற்கு | கைப்பந்துப் போட்டி | பி.எல்.ஆனந்தன் |
| 26 | 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை | சென்னை கிழக்கு | கால்பந்துப் போட்டி | ம.அசோக்குமார் |
| 27 | 7.12.2023 வியாழக்கிழமை | தூத்துக்குடி வடக்கு | கைப்பந்துப் போட்டி | ஆ.பாலகுருசாமி |
| 28 | 09.12.2023 சனிக்கிழமை | தஞ்சை தெற்கு | கைப்பந்துப் போட்டி | சோ. விஜயகுமார் |
| 29 | 09.12.2023 சனிக்கிழமை | புதுக்கோட்டை வடக்கு | கபடிப் போட்டி பெண்கள் | வி.ஜி.ஆர். மணிவண்ணன் |
| 30 | 09.12.2023 சனிக்கிழமை | கள்ளக்குறிச்சி தெற்கு | கிரிக்கெட் போட்டி | டாக்டர் ஏ.கே. கண்ணதாசன் |
| 31 | 09.12.2023 சனிக்கிழமை | தென்காசி வடக்கு | கிரிக்கெட் போட்டி | ச. காசிராஜன் |
| 32 | 09.12.2023 சனிக்கிழமை | நீலகிரி | கால்பந்துப் போட்டி | ஏ.ஆல்வின் |
| 33 | 09.12.2023 சனிக்கிழமை | சிவகங்கை | கைப்பந்துப் போட்டி | கே.எஸ். நாராயணன் |
| 34 | 10.12.2023 ஞாயிற்றுக்கிழமை | கோவை மாநகர் | கிரிக்கெட் போட்டி | எம்.எம்.சஞ்சய் குமார் |
| 35 | 10.12.2023 ஞாயிற்றுக்கிழமை | திருச்சி வடக்கு | கபடிப்போட்டி, | செ. சுரேஷ்குமார் |
| 36 | 10.12.2023 ஞாயிற்றுக்கிழமை | கோவை வடக்கு | கிரிக்கெட் போட்டி | தொ.மு.யாகராஜன் |
| 37 | 16.12.2023 சனிக்கிழமை | நாமக்கல் கிழக்கு | கபடிப்போட்டி, | வ.முரளி |
| 38 | 19.12.2023 செவ்வாய்க்கிழமை | இராமநாதபுரம் | கால்பந்துப் போட்டி | மு.ஜகாங்கிர் |
| 39 | 22.12.2023 வெள்ளிக்கிழமை | தென்காசி தெற்கு | கைப்பந்துப் போட்டி | அ.ஜயம்பெருமாள் |
| 40 | 23.12.2023 சனிக்கிழமை | தருமபுரி மேற்கு | கபடிப்போட்டி, | ப.ஆனந்தன் |
| 41 | 23.12.2023 சனிக்கிழமை | சென்னை வடகிழக்கு | மகளிர் கால்பந்துப் போட்டி | சன் பி.முனியாண்டி |
| 42 | 24.12.2023 ஞாயிற்றுக்கிழமை | திருப்பூர் வடக்கு | சிலம்பம் போட்டி | க. ஜெகதீஷ் |
| 43 | 24.12.2023 ஞாயிற்றுக்கிழமை | சேலம் மத்திய | மாரத்தான் | ஏ.அன்புக்கரசு |
| 44 | 26.12.2023 செவ்வாய்க்கிழமை | தஞ்சை மத்திய | கைப்பந்துப் போட்டி | ஆர். ராணி கண்ணன் |
| 45 | 31.12.2023 ஞாயிற்றுக்கிழமை | தருமபுரி கிழக்கு | இறகுப்பந்துப் போட்டி | மோ. அரி விக்னேஷ் |
| 46 | 20.01.2024 சனிக்கிழமை | தஞ்சை வடக்கு | கபடிப் போட்டி, கூடைப்பந்து போட்டி | வ.சிவக்குமார் |

**தயாநிதி மாறன் எம்.பி.**

செயலாளர்

தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி



தலைமைச் செயலகத்தில், நேற்று (20.11.2023) தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் பராமரிப்புத் துறை சார்பில், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 8 இளநிலை உதவியாளர் (நிலை 3) மற்றும் 1 சுருக்கெழுத்து தட்டச்சு பணிகளுக்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார். போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கே.பணீந்திர ரெட்டி, தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் பராமரிப்புத் துறை இயக்குநர் கொ.செந்தில் வேல் மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



கடலூரில் நடைபெற்ற 70–வது அகில இந்திய கூட்டுறவு வார விழாவில் அமைச்சர் சி.வெ.கணேசன் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர், அருண் தம்புராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள், சபா ராஜேந்திரன், கோ.ஐயப்பன், மாநகராட்சி மேயர் திருமதி.சுந்தரி ராஜா மற்றும் துணை மேயர் தாமரைசெல்வன், அரசு துறை அலுவலர்கள் உள்ளனர்.

பல்லாவரம் தொகுதியில் புதிய பேருந்து நிலைய கட்டுமானப் பணி -

# குரோம்பேட்டை காலிமனைகளில் மழைநீர் அகற்றும் பணி!

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆய்வு!

பல்லாவரம், நவ.21

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அஸ்தினாபுரம் பகுதியில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சுமார் 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது. இந்த பணிகளை அதிகாரிகளுடன் நேரில் சென்று இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து குரோம்பேட்டை ஜமீன் ராயப்பேட்டை பகுதியில் உள்ள காலி மனைகளில் மழை நீர் தேங்கி நிற்பதால் அப்பகுதி பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுவதாக புகார் வந்ததை தொடர்ந்து இ.கருணாநிதி எம்.எல்.ஏ. காலி மனைகளில் தேங்கி நிற்கும் தண்ணீரை பம்புகள் மூலம் வெளியேற்றுவது குறித்து இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து பல்லாவரம் துரைப்பாக்கம் ரேடியல் சாலையில் பல்லாவரம் தாசில்தார் அலுவலகம் அருகே உள்ள பொத்தேரியில் இருக்கும் ஆகாயத் தாமரை செடிகளை அப்புறப்படுத்துவது குறித்து கழிவுநீர் கலப்பது தடுப்பது குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். அப்பொழுது பகுதிச் செயலாளர் ஏ.கே. கருணாகரன், மாநகராட்சி செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், உதவி பொறியாளர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

# சென்னை மேற்கு மாவட்ட தொழிலாளர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் எம்.டி.ஆர்.சாரதி மணிமாறன் அறிவிப்பு!

சென்னை, நவ. 21

சென்னை மேற்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எம்.டி.ஆர். சாரதி மணிமாறன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

சென்னை மேற்கு மாவட்ட தொழிலாளர் அணி சார்பாக கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழா ஆலோசனைக் கூட்டம் இன்று (21-11-23) மாலை 5 மணி அளவில் காம்தார் நகர், நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் நடைபெறுகிறது. இதில் மாநில இணைச் செயலாளர்கள் பி.டி.சி. பாலு, ஆர்.வரதன், மு.ராஜகாந்தம் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

ஆகவே கூட்டத்தில் தொழிலாளர் அணி மாவட்ட தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு எம்.டி.ஆர். சாரதி மணிமாறன் தெரிவித்துள்ளார்.

எல்.செல்வமணி தலைமையில்

# 39 வது வட்ட பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் என்.எம்.கதிரேசன் வேண்டுகோள் !

சென்னை நவ:21

சென்னை வடக்கு மாவட்டம், 39வது வட்டத்தில் பாக முகவர்கள் கூட்டம் நடைபெறுகிறது.இது குறித்து வட்டக் கழகச் செயலாளர் என்.எம்.கதிரேசன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு;

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 39வது வட்டத்தில்( BLA:2 ) பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று ( 21.11.2023 செவ்வாய்க்கிழமை) மாலை 6.00 மணியளவில் வட்ட அவைத் தலைவர் எல்.செல்வமணி தலைமையில் 782/1 டி.எச்.ரோடு டோல்கேட் அருகில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் வட்ட கழக நிர்வாகிகள்,மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், அனைத்து மன்ற நிர்வாகிகள், அனைத்து பாக முகவர்கள் BLA:2 அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி வட்டச் செயலாளர் என். எம்.கதிரேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

மசோதாக்களுக்கு ஒப்புதல் விவகாரம்:

# ஆளுநர் பதவியின் பெருமையைக் காக்க கடைசி வாய்ப்பு!

## “தீக்கதிர்” நாளேடு தலையங்கத்தில் கருத்து!

சென்னை, நவ. 21 -

ஆளுநர் உடனடியாக மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பது அரசியல் சட்டப் பூர்வ கடமை மட்டுமல்ல, ஆளுநர் பதவியின் பெருமையை பாதுகாத்துக் கொள்ள வழங்கப்பட்டுள்ள கடைசி வாய்ப்பு என “தீக்கதிர்” நாளேடு தலையங்கத்தில் கருத்து தெரிவித்துள்ளது.

அது வருமாறு:

தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப் பட்டு ஒப்புதலுக்காக அனுப்பப் பட்ட பல்கலைக் கழகங்கள் திருத்தச் சட்டம் தொடர்பாக 10 மசோதாக்களை ஆளுநர் ஆர்.என்.ரவி திருப்பி அனுப்பிய நிலையில் அந்த மசோதாக்கள் சட்டப்பேரவையில் மீண்டும் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டு அவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இப்போது இந்த மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதைத் தவிர ஆளுநருக்கு வேறு வழியில்லை.

ஆனால் ஆளுநர் ஆர். என்.ரவி அரசியல் சட்டப் பூர்வமாக நடந்து கொள்பவர் அல்ல. ஏதேனும் குறுக்குவழிகளை கண்டுபிடித்து மசோதாக்களை மீண்டும் முடக்கி வைக்க முயலாமல் இந்த 10 மசோதாக்களுக்கும் உடனடியாக ஒப்புதல் அளிப்பதன் மூலம் அவர் வகிக்கும் பதவியின் கண்ணியத்தை காப்பாற்ற முன்வருவார் என தமிழ்நாடு எதிர் பார்க்கிறது.



தீக்கதிர்

2023 நவம்பர் 20 திங்கட்கிழமை

ஒப்புதல் அளிப்பது ஒன்றே ஆளுநர் முன்னுள்ள ஒரே வழி

தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப் பட்டு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட பல்கலைக் கழகங்கள் திருத்தச் சட்டம் தொடர்பாக 10 மசோதாக்களை ஆளுநர் ஆர்.என்.ரவி திருப்பி அனுப்பிய நிலையில் அந்த மசோதாக்கள் சட்டப்பேரவையில் மீண்டும் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டு அவருக்கு அனுப்பப் பட்டுள்ளது. இப்போது இந்த மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதைத் தவிர ஆளுநருக்கு வேறு வழியில்லை.

சட்டப்பேரவையில் இந்த மசோதாக்களை மீண்டும் தாக்கல் செய்யும் வகையில் அரசினர் தீர்மானத்தை முன்மொழிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆற்றிய உரை வரலாற்றுச் சிறப்பு மிக்கது ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்ட வார்த்தைகளைக் கொண்டு மிகவும் கவனமாக இந்த மசோதாக்களை முதல்வர் மீண்டும் முன்மொழிந்துள்ளார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளும் இந்த தீர்மானத்தை ஒரு மனதாக ஆதரித்து நிறைவேற்றியுள்ளன.

ஒன்றிய அரசுக்கு ஆளுநர் காவடி தூக்குகிறார் என்றால், அவருக்கு காவடி தூக்குவதையே வாடிக்கையாகக் கொண்டுள்ள பா.ஜ.க. அரசினர் தீர்மானத்தை ஆதரிப்பதை தவிர்த்து அவையிலிருந்து வெளிநடப்பு செய்துள்ளது. இது எதிர் பார்க்கக் கூடிய ஒன்றே. ஆனால் தங்களது ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப் பட்ட மசோதாக்களுக்குக் கூட இன்னமும் ஆளுநர் ஒப்புதல் அளிக்காத நிலையில் அ.தி.மு.க.வும் இந்த மசோதாக்களை ஆதரிப்பதைத் தவிர்க்க வெளிநடப்பு செய்துள்ளது கேலிக்கூத்தானதாகும்.

ஆளுநர் நிறுத்தி வைப்பதாகத்தான் கூறியுள்ளார். நிராகரிக்கவில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி பொருத்தமற்ற வாதத்தை முன்வைத்தார். இதற்கு உரிய பதிலளிக்கப்பட்ட நிலையில், மீன்வள பல்கலைக் கழகத்திற்கு வைக்கப் பட்ட ஜெயலலிதாவின் பெயரை நீக்கிவிட்டதாக கூறி அ.தி.மு.க. வெளிநடப்பு செய்தது. அதுவும் கூட தவறான தகவலே ஆகும் என ஆளுங்கட்சி தரப்பில் சுட்டிக்காட்டப் பட்ட பிறகும் அ.தி.மு.க. வெளிநடப்பு செய்துள்ளதன் மூலம் ஆளுநரையும், பா.ஜ.க.வையும் அந்தக் கட்சி பகைத்துக் கொள்ள விரும்பவில்லை என்பதையே காட்டுகிறது. ஆளுநர் உடனடியாக இந்த மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பது அரசியல் சட்டப் பூர்வ கடமை மட்டுமல்ல, ஆளுநர் பதவியின் பெருமையை பாதுகாத்துக் கொள்ள வழங்கப்பட்டுள்ள கடைசி வாய்ப்பும் ஆகும்.

இவ்வாறு “தீக்கதிர்” தலையங்கத்தில் கருத்து கூறியுள்ளது.

## சமூக வலைதளங்களில் வலம் வருவது!

கொஞ்சமும் கிரிக்கெட்க்கு சம்பந்தமில்லாத ஜெய்ஷாவை ஹெட்டா போட்டு,

வான்கடேவுல நடக்க வேண்டிய மேட்ச்சை பேருக்காக மோடி கிரௌண்ட்ல நடத்தி,

சியர்ஸ் பண்ண வேண்டிய ஃபேன்ஸ் ஜெய்ஶ்ரீராம் சொல்ற அளவுக்கு மதவெறியை ஊட்டி,

கபில்தேவ், கங்குலி, தோனி மாதிரி கிரிக்கெட் ஜாம்பவான்ஸ கூப்பிடாம, சத்குருவை கூப்பிட்டு டிப்ஸ் கேட்டு,

கப் ஜெயிச்சா அதை வச்சு 2024 எலெக்சன்ல மைலேஜ் தேத்துற பிளான்ல இருக்குற கட்சி..

இப்ப சொல்லு, தோத்தது பாஜகவா இல்ல இந்தியன் டீமா?

~ கண்டிப்பா இந்தியன் டீம் இல்ல, நேத்து தோத்தது பாஜகதான்..

## ‘வாட்ஸ் அப்’பில் வரும் செய்தி!

உலக கோப்பையை பார்ப்பனரல்லாதாரே இருமுறையும் இந்தியாவுக்கு பெற்றுக் கொடுத்தனர்!
விளையாட்டில் வெல்லக் கூடிய புத்திக்கூர்மை கபில்தேவ், தோனிக்கு மட்டுமே இருந்தது என்பதை இன்றைய Final Match காட்டிக் கொண்டிருக்கிறது!
ஆனால் அவரைத்தான் இன்றைய கிரிக்கெட் தலைமை அவமதிக்கிறது!!



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், பொன்னேரி தொகுதி பொன்னேரியில் ரூ.3.75 கோடி திட்ட மதிப்பில் புதிதாக கட்டப்பட்ட வட்ட ஆட்சியர் அலுவலகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட செயலாளருமான டி.ஜெ.கோவிந்தராஜன், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர், மாவட்ட ஆட்சித்தலைவர் பிரபுசங்கர், மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்ட அலுவலர், டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், ஜி.ரவிக்குமார், கா.சு.ஜெகதீசன், ஜான்(எ)பொன்னுசாமி, க.சு.தமிழ்உதயன், ருக்மணி மோகன்ராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

பெரம்பலூர் மாவட்டம்

# ஆலத்தூர் மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சோமு.மதியழகன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற டாக்டர் செ.வல்லபன், எம்.பி,,பி. எஸ்., (1 வது வார்டு, செட்டிக்குளம் & அஞ்சல், ஆலத்தூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம்) அவர்கள் ஆலத்தூர் மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.


ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 20.11.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கத்திவாக்கம் மிசா இ.வீரராகவன்
### நவம்பர் 21 (2010)



கத்திவாக்கம் பகுதியில் 1959ஆம் ஆண்டு கழகக் கிளையைத் துவக்கி, முதல் கிளைச் செயலாளர் என்ற பெருமையும் பின்னர் நகரக் கழகச் செயலாளராக 35 ஆண்டு காலம் தொடர்ந்து கழகப் பணியாற்றியவர். தொடர்ந்து பொதுக்குழு உறுப்பினராகவும், கத்திவாக்கம் நகராட்சியின் முதல் நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசமும் மற்றும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு 27 முறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.11.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள 4,272 குடியிருப்புகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 6 பயனாளிகளுக்கு ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.11.2023) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 14 கோடியே 86 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள திருவட்டார், கிள்ளியூர் மற்றும் பொன்னேரி வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் தேனியில் கூட்டரங்கக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே. பிரபாகர், நில நிர்வாக ஆணையர் சு. நாகராஜன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் வே.ராஜாராமன், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் ப.மதுசூதன் ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### மசோதாக்கள்; ஆளுநர்களின் போலி உறக்கத்தை கலைக்க

# உச்சநீதிமன்றம் காலக்கெடுவை நிர்ணயிக்கும் நேரம் வந்துவிட்டது!

## ‘ஆளுநர்களுக்கு வீட்டோ அதிகாரம் இல்லை’ என்று குறிப்பிட்டு ‘சண்டே டைம்ஸ்’ சிறப்புக் கட்டுரை!

**சென்னை, நவ. 21 -**

**“மசோதாக்கள் மீதான ஆளுநர்களின் போலி உறக்கத்தைக் கலைக்க, உச்சநீதி மன்றம் காலக்கெடுவை நிர்ணயிக் கும் நேரம் வந்துவிட்டது என்றும் ஆளுநர்களுக்கு வீட்டோ அதிகாரம் இல்லை” என்றும் குறிப்பிட்டு ‘சண்டே டைம்ஸ்’ (19.11.2023) சிறப்புக் கட்டுரை வெளியிட்டுள்ளது.**

அது வருமாறு:

தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி, கவர்னர் என்ற முறையில், ஒரு மசோதாவை நிறுத்தி வைத்தால், அந்த மசோதா இறந்துவிட்டதாக அர்த்தம் என, ஆறு மாதங்களுக்கு முன் கூறினார். அவர் அந்த நேரத்தில் சுமார் இரண்டு டஜன் மசோதாக்கள் மற்றும் வழக்கு அனுமதி கோரிக்கைகளில் அனுமதி வழங்க வேண்டிய நிலையில் இருந்தார்.

இருப்பினும், நவம்பர் 9 ஆம் தேதி உச்ச நீதிமன்றம் ஆளுநர்கள் பற்றி ‘கடுமையான கவலை’ தெரிவித்தபோது, அவர் ராஜ்பவனில் பல ஆண்டுகளாக செயலிழந்த இரண்டு அ.தி.மு.க. கால மசோதாக்கள் உட்பட 10 மசோதாக்களை ‘திருப்பி’ அனுப்பி வைத்தார்.

அவரது சொந்த வார்த்தைகளின்படி, ‘வித்ஹெல்ட்’ என்பது இறந்துவிட்டது என்றால், இந்த ‘இறந்த’ மசோதாக்கள் இப்போது எவ்வாறு உயிர்த்தெழுந்தன? சுப்ரீம் கோர்ட்டின் கெடுபிடி காரணமா? இல்லை. அது அரசியலமைப்பின் காரணமாகும். ஒரு மசோதாவை சட்டப் பேரவையில் ஏற்று ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பினால், அது தமிழ்நாட்டில் நடந்தது போல பல ஆண்டுகளாக நிறுத்திவைக்கப் பட்டாலும் ரத்தானதாக கூற முடியாது.

நிச்சயமாக, அரசமைப்புச் சட்டத்தின் 200வது பிரிவு, மாநில மசோதாக்களுக்கு ஆளுநரின் அதிகாரத்தைக் கையாள்கிறது, முடிவெடுப் பதற்கான காலக்கெடு குறித்து மௌனமாக உள்ளது. பல ஆண்டுகளாக செயலற்ற தன்மை ஒரு மசோதாவைக் கொன்றுவிடும் என்று இது அர்த்தப்படுத்துவதில்லை. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் ஆளுநர்களுக்கு அத்தகைய வீட்டோ அதிகாரம் வழங்கப்படவில்லை.



SUNDAY TIMES OF INDIA

6 TIMES CITY | REGION

Governors have no veto power, they can’t kill Bills assemblies pass

‘Withold’ Amounts To ‘Return’

The time has come for the apex court to specify a time limit ending gubernatorial fake sleep, by introducing a deeming clause, wherein a law would be deemed to have obtained assent if not decided within a time limit

நிலுவையில் உள்ள மசோதாக்கள் தொடர்பாக ஆளுநர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே ஏற்பட்டுள்ள இந்த மோதலைப் புரிந்து கொள்ள, 200வது பிரிவை காண வேண்டும். அது இரண்டு கூறுகளை உள்ளடக்கியது; ஆளுநரின் ஒன்று, மூன்று கடமைகள்; மற்றும், இரண்டு, விதிகள். ஒரு சட்டத்தின் விதி முறை குறிப்பிட்ட உட்பிரிவில் உள்ள அதிகாரத்தின் அளவைக் கட்டுப்படுத்துகிறது அல்லது வரையறுக்கிறது.

சட்டப்பிரிவு 200ன்படி, ஒரு மாநில சட்டமன்றத்தால் ஒரு மசோதா ஏற்றுக் கொள்ளப்பட்டு அவருக்கு அனுப்பப்பட்டவுடன், ஆளுநருக்கு இருக்கும் மூன்று விருப்பங்கள்: ஒப்புதல் அளிக்கவும் அல்லது ‘வைத்து கொள்ளுதல்’ அல்லது குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்புதல் ஆகும்.

குடியரசுத் தலைவருக்கு ஒப்புதல் அளித்தல் மற்றும் அனுப்புதல் என்பதன் பொருள் பற்றி எந்த கருத்து வேறுபாடும் இல்லை என்றாலும், ‘வித்ஹோல்ட்’ என்ற சொல் ஆளுநர் ரவிக்கு சுதந்திரமான அதிகாரத்தை அனுபவிக்கும் உணர்வை ஏற்படுத்தியதாகத் தெரிகிறது. ஆனால் அத்தகைய எண்ணம் சட்டப்பிரிவு 200 இன் முதல் பிரிவின் மூலம் விரைவாக செயல்தவிர்க்கப்பட்டது, இது சட்டத்தை மறுபரிசீலனை செய்யுமாறு சபையைக் கோரும் செய்தியுடன் மசோதாவை ஆளுநர் திருப்பி அனுப்ப வேண்டும் .

திருத்தத்துடன் அல்லது திருத்தம் இல்லாமலேயே மீண்டும் சபையில் மசோதா நிறை வேற்றப்பட்டு, ஆளுநரின் ஒப்பு தலுக்காக மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டால், அவர் ‘ஒப்புதலைத் தடுக்க மாட்டார்’ என்று அது கூறுகிறது. பிரிவு 200 இன் முதல் விதியில் பயன்படுத்தப்பட்ட ‘திரும்ப’ என்ற சொல் குறிப்பி டத்தக்கது, ஏனெனில் ‘வித்ஹோல்ட்’ என்பது ‘திரும்ப’ என்பதைக் குறிக்கிறது. நீதிமன்றத் தீர்ப்புகள் எதுவும் இல்லை, ஆனால் 2002 ஆம் ஆண்டில் அரசியலமைப்புச் சட்டத்தின் செயல்பாடு குறித்த நீதிபதி எம்.என். வெங்கடாசலய்யா கமிஷன் அதைப் பற்றி விவாதித்து, அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் ‘வித்ஹோல்ட்’ என்ற வார்த்தையை நீக்க பரிந்துரைத்தது.

200வது பிரிவு மற்றும் அதன் விதிமுறைகளின் இந்த ஒருங்கிணைந்த வாசிப்பின் காரணமாக உச்சநீதிமன்றம் பல தீர்ப்புகளை எழுதியுள்ளது மற்றும் மறுபரிசீலனை செய்துள்ளது. எனவே, கவர்னர் தடுத்து வைக்கப்பட்ட மசோதா இறந்துவிட்டதாகக் கூறுவது அனுபவமற்றதாக இருக்கிறது.

ஒன்று முதல் மூன்று ஆண்டுகள் வரை குடியரசுத் தலைவருக்கும் பரிந்துரைக்காக அனுப்பாமலும் 10 மசோதாக்களை திருப்பி அனுப்பாமலும் அதற்கு உயிர் இல்லாமல் காலம் கடத்துகிறார் என்றால் அந்த அளவிற்கா அவரது சட்ட ஆலோசகர்கள் அவருக்கு ஆலோசனை உண்மைகளை அளிக்காமல் இருந்திருப்பார்கள்.

ஒரு மசோதாவை என்றென்றும் நிறுத்தி வைப்பது போன்ற வேறு எதுவும் இல்லை, ஏனெனில் அரசியலமைப்புச் சட்டம் அத்தகைய அதிகாரத்தை யாருக்கும் வழங்கவில்லை. இந்த யோசனை தவிர்க்க முடியாமல் ஓரிரு ஆண்டுகள் அல்லது அதற்கும் மேலாக தாமதப்படுத்தக்கூடும். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்கள் அப்போது உச்ச நீதிமன்றத்தின் கதவுகளைத் தட்ட வேண்டும்.

ஆளுநர்களுக்கு அனுப்பப்பட்ட மசோதாக்கள் மற்றும் அனுமதி கோரிக்கைகளை எடுக்க காலக்கெடு எதுவும் குறிப்பிடப்படவில்லை என்ற எளிய காரணத்திற்காக, கூட்டாட்சித் தத்துவத்துடன் ஆளுநர்கள் விளையாடும் சூழ்நிலையை நமது அரசியலமைப்பை இயற்றியவர்கள் எடுக்கவில்லை. ஆளுநரின் போலி உறக்கத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான காலக்கெடுவை உச்ச நீதிமன்றம் குறிப்பிடுவதற்கான நேரம் வந்துவிட்டது, ஒரு குறிப்பிட்ட முக்கிய ஷரத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம், ஒரு சட்டத்தை ஒரு காலக்கெடுவிற்குள் முடிவு செய்யாவிட்டால் அது ஒப்புதல் பெற்றதாகக் கருதப்படும்.

இவ்வாறு ‘சண்டே டைம்ஸ்’ கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காசா மக்களுக்கு 2வது முறையாக நிவாரணப் பொருட்கள் அனுப்பியது இந்தியா!

*காஜியாபாத், நவ. 21 -*

*இஸ்ரேல் போரால் பாதிக்கப்பட்ட காசா பகுதி மக்களுக்கு உதவ, விமானப் படையின் சி17 ரக சரக்கு விமானத்தில் 2வது முறையாக இந்தியா நேற்று முன்தினம் நிவாரணப் பொருட்களை அனுப்பியது.*

*காசா நிவாரண முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு, பல நாடுகள் நிவாரணப் பொருட்களை அனுப்பி வருகின்றன. இந்த பொருள்கள் எகிப்து நாட்டின் ரஃபா எல்லை வழியாக காசா பகுதிக்குக் கொண்டு செல்லப்படுகிறது. காசா பகுதி மக்களுக்கு உதவ இந்தியா ஏற்கனவே 38 டன் நிவாரணப் பொருட்களை விமானப் படையின் ஜம்போ விமானம் மூலம் அனுப்பியது.*

*32 டன் பொருட்கள்: இந்நிலையில் 2வது முறையாக இந்தியா நேற்று முன்தினம் 32 டன் நிவாரணப் பொருட்களையும், 6.5 டன் மருந்து பொருட்களையும் விமானப் படையின் சி17 குளோ ப் மாஸ்டர் விமானத்தில் நேற்று அனுப்பியது. இந்த விமானம் எகிப்து நாட்டின் எல்அரிஷ் விமான நிலையத்துக்குச் சென்றது. அங்கிருந்து நிவாரணப் பொருட்கள் காசா பகுதிக்கு கொண்டு செல்லப்படும்.*

*இந்தியா அனுப்பியுள்ள நிவாரணப் பொருட்களில் வலி நிவாரண மாத்திரைகள், கூடாரங்கள், படுக்கை விரிப்புகள், தார்பாலின் ஷீட்டுகள், துப்புரவுக்குத் தேவையானப் பொருட்கள், தண்ணீரை சுத்தப்படுத்தும் மாத்திரைகள், உயிர் காக்கும் மருந்துகள், அறுவை சிகிச்சை உபகரணங்கள் மற்றும் இதர தேவையான பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளன.*



திருவண்ணாமலையில் மாவட்ட துணை அமைப்பாளர் மு.அம்பேத்கர் சகோதரி மு.ஆனந்தஜோதி சு.மாணிக்கம் மணவிழாவினை, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். உடன் வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், த.வேணுகோபால், டாக்டர் இரா.ஸ்ரீதரன், மு.பெ.கிரி. எம்.எல்.ஏ., ப.கார்த்திவேல்மாறன், ப.இந்திரராஜன், எ.வ.வே.கம்பன், எஸ்.பன்னீர்செல்வம், பெ.கோவிந்தன் உட்பட பலர் உள்ளனர்.

### அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள்

# சி.விஜயபாஸ்கர், பி.வி.ரமணா மீதான குட்கா வழக்கு!

## அடுத்த கட்ட நடவடிக்கைக்கு ஆளுநர் ஒப்புதல்!

**சென்னை, நவ. 21 -**

**அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மீது ஊழல் வழக்குகள் தொடர்வதற்கான அனுமதி கோரி தமிழக அரசு ஆளுநருக்கு கோரிக்கையை அனுப்பியது. இந்த கோரிக்கைக்கு தற்போது ஆளுநர் ஆர்.என்.ரவி அனுமதியளித்துள்ளார்.**

முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்களான டாக்டர் சி.விஜயபாஸ்கர் மற்றும் பி.வி.ரமணா ஆகியோர் குட்கா, மாவா விநியோகிப்பாளர்களிடமிருந்து சட்ட விரோதமாகப் பணம் பெற்ற குற்றச்சாட்டு எழுந்தது. இதனையடுத்து இது தொடர்பாக உயர்நீதிமன்ற உத்தரவுப்படி கிரிமினல் வழக்குப் பதிவு செய்யப்பட்டு சி.பி.ஐ. வழக்குப் பதிவு செய்து விசாரித்து, இவர்கள் மீது நீதிமன்ற விசாரணை தொடங்குவதற்கு இசைவு ஆணையை கோரியிருந்தது.

இந்த கோரிக்கையை மாநில அமைச்சரவை ஆளுநருக்கு கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் அனுப்பி வைத்திருந்தது. இந்த கோரிக்கை மீது எந்த பதிலும் கிடைக்காததால் இந்த வழக்கில் எந்தவித மேல் நடவடிக்கையும் எடுக்க முடியாமல் இருந்தது. இந்நிலையில் தற்போது இந்த கோரிக்கைக்கு ஆளுநர் ஆர்.என். ரவி ஒப்புதல் அளித்திருக்கிறார்.

இது தவிர மேலும், இரண்டு நிகழ்வுகளில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சராக இருந்த கே.சி.வீரமணி மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்த எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகியோர் மீது நீதிமன்ற விசாரணையை தொடங்கிட அனுமதியை சி.பி.ஐ. கோரியது. இந்தக் கோரிக்கைகளுக்கு மாநில அமைச்சரவை அனுமதி அளித்து அதற்கான கடிதங்களை கடந்த ஆண்டு செப்டம்பர் மாதமும், இந்த ஆண்டு ஆண்டு மே மாதமும் அளுநர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்திருந்தது. இதில் எம்.ஆர்.விஜய பாஸ்கர் தொடர்புடைய கோரிக்கை மட்டும் பரிசீலனையில் இருப்பதாக ஆளுநர் அலுவலகம் தெரிவித்திருக்கிறது. அதேபோல பேராசிரியர் நியமன முறைகேடு தொடர்பாக தஞ்சை பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பாஸ்கரிடம் விசாரணை நடத்தவும் ஆளுநர் தரப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

மறுபுறம் ஆயுள் தண்டனை கைதிகளை முன் கூட்டிய விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்ததில் 165 கைதிகளின் கோரிக்கை மனு நிராகரிக்கப்பட்டிருக்கிறது. மொத்தமாக 580 கைதிகளை விடுவிக்க வேண்டும் என தமிழக அரசு சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

முரசொலி பாசறை
சென்னை 21.11.2023

# கலைஞர் இயக்கவியல்: எழுத்துக் கலைஞர்!

■ நீரை.மகேந்திரன்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த நாட்களில், தமிழ்நாடு அரசு அறிவித்த எழுத்தாளர் கலைஞர் குழு சார்பில், முத்தமிழ் தேர் தமிழ்நாடு முழுவதும் வலம் வந்து கொண்டிருக்கிறது.

கலைஞரின் எழுத்துலகப் பயணங்களைப் பெருமைப்படுத்தும் அந்தத் தேர்ப் பயணம் தொடர்பாக சமீபத்தில், அந்தக் குழுவில் இடம் பெற்றுள்ள, சிந்துவெளி ஆய்வாளரும், ஓய்வுபெற்ற ஆட்சிப்பணி அதிகாரியுமான ஆர். பாலகிருஷ்ணன் அவர்களோடு ஒரு உரையாடல் நிகழ்ந்தது.

“உலக அளவில் கலைஞரைப் போல ஒரு எழுத்தாளர் முழுநேர அரசியல்வாதியாக இருந்ததைக் கவனிக்க முடியவில்லை. அல்லது ஒரு அரசியல்வாதி முழுநேர எழுத்தாளராகவும் இருக்கவில்லை” என்றார். அதை ஒப்புநோக்கும் வகையில், உலக அளவிலான பல தரவுகளையும் குறிப்பிட்டார்.

## முழுமையான அரசியல்வாதி, முழுமையான எழுத்தாளர்

வின்சன்ட் சர்ச்சில், பெட்ரண்ட் ரஸ்ஸல் என பல அரசியல்வாதி எழுத்தாளர்கள் தொடர்ச்சியாக இயங்கியவர்கள் இல்லை. கம்யூனிச தத்துவத்தை உலகுக்கு அளித்த மாமேதை கார்ல் மார்க்ஸ், அந்தத் தத்துவத்தை ருஷ்யாவில் அதிகாரத்துக்குக் கொண்டு வந்த ருஷ்யப் புரட்சி நாயகன் விளாதிமிர் லெனின் ஆகியோருக்குப் பின்னர், முழுமையான அரசியல்வாதியாகவும், முழுமையான எழுத்தாளராகவும் விளங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

சமூக ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த இந்திய சூழலில், தவிர நமது ஜனநாயக அமைப்பு முறையில் அரசியல்வாதியாக, ஆட்சி அதிகார நிர்வாகியாகச் செயல்பட்டுக்கொண்டே எழுத்துப் பணியையும் தொடர் செயல்பாடாகக் கொண்டிருந்தவர் கலைஞர் மட்டுமே. பண்டித ஜவஹர்லால் நேரு, மகாத்மா காந்தி ஆகியோர் அரசியல் செயல்பாடுகளைக் கொண்டிருந்தாலும் தொடர்ச்சியாக, தீவிரமாக எழுதியவர்கள் இல்லை.

திராவிடப் பேராசான்கள் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் தொடர்ச்சியாகப் பேசியவை, எழுதியவை இருந்தாலும் கலை, இலக்கிய, திரைத்துறைச் செயல்களில் கலைஞரின் பங்கு தனித்துத் தெரியக்கூடியது. அவரது பேனா அந்தக் கலையில் புதியவற்றைத் தொட்டுள்ளது.

## ஒப்புவமை இல்லாத பயணம்!

கலைஞருக்குப் பிறகான சூழலிலும் அரசியல்வாதிகளாக உள்ளோர் எழுத்துப் பணி என்பது பகுதிநேர அல்லது பத்தி எழுதுபவர்கள் என்கிற அளவிலேயே உள்ளனர். இந்த அளவீடுகள் படி காங்கிரஸ் மூத்த தலைவர்கள் ப.சிதம்பரம், சசி தரூர் ஆகியோர் எழுத்துக்களைக் கவனிக்கலாம்.

இந்த அளவுகள் எதுவுமே கலைஞரோடு பொருத்த முடியாத நிலையைப் பார்க்கலாம். நான் சொல்வது காலச் சூழலோடு மட்டுமல்ல, வயது, அனுபவங்கள் மட்டுமல்ல. கள அனுபவங்களுடன், கலை இலக்கியச் செயல்பாடுகளுடன் அரசியல் நோக்கிலான எழுத்துகளை, கலைஞரிடம் எல்லை வரையறைகள் இல்லாமல் நீள்வதைப் பார்க்கலாம்.

கலைஞர் தனது இளமைக் காலத்தில் இருந்தே எழுதிய வேகம், சினிமா எழுத்துகளில் உச்சம் கொண்டிருந்த நேரத்தில் எழுதியவற்றை அவர் எழுத்து காலத்தின் முதற்பாகமாகக் கொண்டால், இரண்டாவது ஆட்சி காலத்துப் பிறகும் மூன்றாவது ஆட்சி காலத்துக்குமான இடையில் கிடைத்த





காலத்தில் எழுதியவை, அவரது எழுத்துலகின் இரண்டாம் பாகமாகக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் எழுதியவை மூன்றாம் பாகமெனக் கொள்ளக்கூடியவை.

அதாவது, 1977–ஆம் ஆண்டுக்கும் 1989–ஆம் ஆண்டுக்கும் இடையிலான காலத்தில் அவரை இயக்கியவை கழகச் செயல்பாடுகள் மட்டுமல்ல, கலை இலக்கியச் செயல்பாடுகளும்தான். குறிப்பாக கலைஞர் இயக்கவியல் என்கிற கடந்த இரண்டு கட்டுரைகள் பேசிய காலத்தில், அவர் எழுதியவையும் அதிகம்.

## நேரத்தைக் கையாண்ட நிதானம்!

“1976–ஆம் ஆண்டு, தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட பின்னர், எதிர்க்கட்சியாகப் பணியாற்றிய நிலையில் ஓய்வான நேரத்தில் திரைப்படத் துறையிலும் மீண்டும் சற்றுக் கவனம் செலுத்திட நேரம் கிடைத்தது” எனத் திரைப்படத் துறை தொடர்பான குறிப்பு ஒன்றில் குறிப்பிடுகிறார்.

கலைஞர் தனது காலத்தை எவ்வளவு நிதானமாக எதிர் கொண்டார் என்பதற்கு மிகப் பொருத்தமான உதாரணமாக **‘கலைஞரின் கவிதைகள்’** தொகுப்பினைக் குறிப்பிடலாம். 1976–ஆம் ஆண்டு நெருக்கடியை சந்தித்து, 1977–ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்த நிலையில், ஒரு படைத்தலைவன் இழப்புகளுக்குப் பின்னர், தவறுகளை ஆய்வு செய்யக்கூடிய அந்தக் கணத்தில், கலைஞரோ ‘கலைஞரின் கவிதைகள்’ தொகுப்பினைக் கொண்டு வந்துள்ளார். 1977–ஆம் ஆண்டுப் பாரதி பதிப்பகம் கலைஞரின் கவிதைகள் தொகுப்பினைக் கொண்டு வந்துள்ளது.

**அவர் தனிப்பட்ட முறையில் இயங்கியது மட்டுமல்ல, கலை இலக்கிய ரீதியான பண்பாட்டு அசைவுகளையும் தமிழ்நாட்டில் உருவாக்கியதில் குறிப்பிடத்தக்க பாகம் வகிக்கிறார்.**

## இயங்கிக் கொண்டிருந்த பேனா!

அந்த 13 ஆண்டு காலத்தில் ‘வண்டிக்காரன் மகன், ‘நெஞ்சுக்கு நீதி, ‘காலம் பதில் சொல்லும், ‘மாடி வீட்டு ஏழை, ‘தூக்கு மேடை, ‘பாலைவன ரோஜாக்கள், ‘பாடாத தேனீக்கள், ‘தென்றல் சுடும், ‘நியாயத்தராசு, ‘பொறுத்தது போதும், ‘பாச மழை, ‘காவலுக்குக் கெட்டிக்காரன், ‘வீரன் வேலுத்தம்பி எனப் பல திரைப்படங்கள் தொடர்ச்சியாக, அவர் எழுத்துக்களில் வந்துள்ளன

இந்தக் காலகட்டத்தில் முரசொலியில் தொடர்ச்சியாக உடன்பிறப்புக் கடிதங்கள் எழுதுகிறார். 1980–ஆம் ஆண்டிலிருந்து 1989–ஆம் ஆண்டு வரையில் மாதத்துக்குச் சராசரியாக 10 கடிதங்கள் எழுதியுள்ளார்.

1978–ஆம் ஆண்டு அரும்பு, வான்கோழி, பரதாயணம், 1979–இல் ஒரு மரம் பூத்தது, புனித ராஜ்ஜியம், நரன் மணிமாலை, 1981–இல் பேசும் கலை வளர்ப்போம், 1982–ஆம் ஆண்டு முடியாத தொடர்கதை, வைரமணிகள், 1983 -இல் தென்பாண்டிச் சிங்கம், 1985 -இல் இந்தியா? இந்தியாவா?, 1987–இல் சங்கத்தமிழ்,1988–இல் பொன்னர் சங்கர் எனத் தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருக்கிறார். அதற்கிடையே நெஞ்சுக்கு நீதி உள்ளிட்ட தொடர்கள்.

இந்தக் காலத்தில் இலக்கிய நிகழ்வுகளும், இலக்கிய மேடைகளும் மிக அதிக அளவில் கலந்து கொண்டிருக்கிறார். சற்றேறக்குறைய கவியரங்க நிகழ்வுகள் உச்சம் பெற்ற காலம் என அவற்றைச் சொல்லலாம். அதாவது அவர் தனிப்பட்ட முறையில் இயங்கியது மட்டுமல்ல, கலை இலக்கிய ரீதியான பண்பாட்டு அசைவுகளையும் தமிழ்நாட்டில் உருவாக்கியதில் குறிப்பிடத்தக்க பாகம் வகிக்கிறார்.

சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்கள், உள்ளாட்சித் தேர்தல்கள், கழகத்தின் முப்பெரும் விழாக்கள், மாநாடுகள், மக்கள் பிரச்சினைகளுக்கான போராட்டங்கள், சிறை, கொள்கைப் பயணங்கள், தொண்டர்களின் சந்திப்புகள் என ஒவ்வொரு நாளும் தொடர் செயல்பாடுகளினூடே அவரது பேனாவும் சகப் பயணியாக இயங்கிக் கொண்டே இருந்துள்ளது.

## ஓய்வே எடுக்காத உழைப்பு

“ஓய்வெடுத்துக் கொள்க” என்று சில நண்பர்கள் கூறினர். ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான் என்று என் கல்லறையின் மீதுதான் எழுதப்படும்” என்று பதில் சொன்னேன்” என 1985–ஆம் ஆண்டு ‘நெஞ்சுக்கு நீதி’ என்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார். கலைஞரின் அந்தக் கூற்றுதான், அவரை இன்னும் நூறு ஆண்டுகளுக்கும் ஒரு இயக்கத்தை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கான சான்றாக நாம் பார்க்க முடியும். ஆனால் ஒன்று, “இதோ ஓய்வு கொண்டிருக்கிறான் என, என் கல்லறையின் மீதுதான் எழுதப்படும்” என்று கலைஞரே குறிப்பிட்டிருந்தாலும், அவர் இன்னமும் ஓய்வெடுக்கவில்லை, இயங்கிக் கொண்டேதான் இருக்கிறார். அவரைப் பற்றி எழுதுவதற்கும், பேசுவதற்கும், கொண்டாடுவதற்கும், கொள்கைப் பாய்ச்சல் நிகழ்த்துவதற்கும் அவரது இயக்கமே நமக்குக் கைகொடுக்கும்.

## திராவிட இயக்க இதழ்கள் - ‘கிளர்ச்சி’




“திராவிட இயக்க வரலாற்றிலே ‘கிளர்ச்சி’யையும் அதன் ஆசிரியர் தோழர் தங்கப்பழம் அவர்களையும் எளிதில் மறந்துவிட முடியாது. வீண் வம்பும், வீராப்பும் செய்து இயக்கத்துடன் மோதிய மாற்றுக் கட்சி இதழ்கள், அவர் தொடுத்தக் கணையினால் கருகிய செய்தி மறக்கக் கூடியது அல்ல.

தூத்துக்குடி சதி வழக்கினால், சென்ற 317 நாட்களாக சிறையினுள் தள்ளப்பட்டு ஜாமீனில் வெளி வந்திருக்கும் ஆசிரியரின் நேர் பார்வையில் 15/8/54 முதல், அதிகப் பக்கங்களுடன் புதுமைக் கருத்துக்கள், கிண்டல் சித்திரங்களோடு வெளி வருகிறது.”

இப்படி ஒரு விளம்பரம் 20/8/54 தேதியிட்ட ‘முரசொலி’ வார இதழில் வெளிவந்துள்ளது. மேற்கூறிய சிறப்புகளுக்குரிய ‘கிளர்ச்சி’, அன்றைய திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி நகரிலிருந்து திராவிடர் இயக்க வார இதழாக வெளி வந்து, பிறகு மாதம் இருமுறை இதழானது. இதன் ஆசிரியர்களாக இராசு.தங்கப்பழம், எம்.எஸ். சிவசாமி என்ற இரட்டையர்கள் இருந்தனர்.

‘விபூதி வீரமுத்து’ என்பவர் நடத்திய ‘அறப்போர்’ என்ற காங்கிரஸ் பத்திரிகைக்கு, ‘கிளர்ச்சி’ இதழ் இரட்டையர்கள் காரசாரமாகப் பதில் எழுதியதாக, ‘இதழியல் கலை: அன்றும் இன்றும்’ நூல் குறிப்பிடுகிறது.

## :.ப்ளாஷ்பேக்



### தொண்டர் இல்லத்தில் உணவு!

தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் 1992–ஆம் ஆண்டு நடந்த பொதுக்கூட்டத்துக்கு அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய தமிழ்நாடு முதலமைச்சருமான தலைவர் தளபதி அவர்கள் வருகை தந்தார். காலையில் பொதுக் கூட்டங்களை எல்லாம் முடித்துக் கொண்டு மாலை வேளையில், எங்களது இல்லத்தில் உணவருந்திய போது இந்தப் படம் எடுக்கப்பட்டது. அப்போது நகர இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த எனது தந்தை க.சாகுல் அவர்கள் இந்த நிகழ்வைப் பல தருணங்களில் எங்களிடம் பெருமை பொங்கக் கூறியுள்ளார்.



முகமது பாசில் ஷாகுல்

**-முகமது பாசில் ஷாகுல்,**
**போடி நகரம்.**


இது போன்ற அரிய புகைப்படங் களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### இளைஞர் அணி உதயம்!

**1980 - ஆம் ஆண்டு ஜூலை மாதம் இருபதாம் தேதி மதுரை ஜான்சி ராணி பூங்கா திடலில் கழகத்தின் இளைஞர் அணி தொடக்க விழா நடைபெற்றது. அதைத் தொடர்ந்து, 1982–ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற இரண்டாம் ஆண்டு விழாவில், இளைஞர் அணியின் மாநில அமைப்பாளராக, இன்றைய கழகத் தலைவரை அறிவித்தார் கலைஞர் .**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 306




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131